12 பக்கங்கள் விலை 50 காசு

நம் நாடு

ஆசிரியர்: மு. கருணாநிதி

"NAM NADU" Official Organ of D. M. K.

மலர்-2 | திருவள்ளுவர் ஆண்டு 2010 25-2-1979 | இதழ் 23

புனித ராஜ்யம்

காட்சி 18

கலைஞர் கருணாநிதி

[பாலம்மாள் வீடு]

பாலம்மாள் பக்திசிரத்தையுடன் பூஜை செய்கிறாள். அப்போது கதவு தட்டும் ஒலி கேட்கிறது திடுக்கிட்ட பாலம்மாள்

"ராமராமா! மறுபடியும் அந்த நொண்டியும் அண்ணாச்சியும் வந்துட்டாங்கபோலிருக்கே ... ஆண்டவா! என்னைக் காப்பாத்துடா!...இப்ப என்ன செய்யலாம்?'

என்று தனக்குத் தானே பேசிக்கொண்டு தெருப்பக்கம் திரும்பி உரத்த குரலில் ...

"கொஞ்சம் இருங்க! இப்பத்தான் குளிச்சிட்டு டிரஸ்மாத்திட்டு இருக்கேன். இதோ வந்திட்டேன்.. தயவு பண்ணி வெயிட் பண்ணுங்கோ..."

என்று கூறிவிட்டு — டெலிபோன் அருகே சென்று

"ஆங்! அதான் சரி! நம்ப எம். எல். ஏ. முருகசாமிக்கு டெலிபோன் பண்ணி நாலு ஆளுங்களை அனுபபச் சொல்லுவோம்',

(என்று மன ஆறுதலுடன்கூறிக்கொண்டே டெலிபோனில் பேசுகிறாள்)

பாலம்மாள்:

(டெலிபோனில்)

அலோ! அலோ! நான்தான் பாலம்மாள் பேசுகிறேன். எம். எல். ஏ. முருகசாமி இருக்காங்களா?

(தொலைபேசியின் மறுமுனையிலிருந்து முருகசாமி எம்.எல்.ஏ பேசுகிறார்)

எம். எல். ஏ:

எம். எல், ஏ. தான் பேசுகிறேன்.

பாலம்மா:

நமஸ்காரம் தம்பி...

எம். எல். ஏ:

அண்ணா நாமம் வாழ்க! என்ன பாலம்மா சௌக்கியமா?. எனக்கு உங்கக்கிட்டேயிருந்து டெலிபோனே காணும்! புது அயிட்டம் வந்தா டெலிபோன் பண்றேன்னு சொல்லியிருந்தீங்க?

பாலம்மா:

நீங்க ஏற்கனவே பாத்த அயிட்டம் தவிர வேற ஒண்ணும் வரலிங்க தம்பி! நீங்க அந்த சோமநாதனை அனுப்புறதா சொல்லியிருந்தீங்க — அவனும் வரலே! அவன் வந்திருந்தா ஒரு எடத்துக்குப் போயி பாத்துட்டு வரலாம்னு யோசிச்சுகிட்டு இருந்தேன். உங்களுக்கு என்ன தம்பி? நீங்கதான் 'பபயர் ஒட்டல்''லே ஒரு நாளைக்கு ஒரு அயிட்டம் பாக்கிறீங்களாம்.

எம். எல். ஏ.:

பாலம்மா பலே ஆளாச்சே' உங்களுக்குத்தான் ஊர்க் கதை பூரா தெரியுமே —

பாலம்மா:

அதிருக்கட்டும் தம்பி — உங்க செல்வாக்கைப் பயன்படுத்தி ஒரு காரியம் செய்யணுமே!

எம். எல். ஏ,

எனக்கு என்னம்மா செல்வாக்கு இருக்கு? ஒரு எழவும் இல்லே. நாங்கதான் எதிலேயும் தலையிடக்கூடாதுன்னு மேலிடத்து உத்திரவாச்சே!

பாலம்மா:

என்ன தம்பீ. என் கிட்டயே கதை விடுறீங்க? மேலிடத்து உத்திரவெல்லாம் ஊர் உலகத்தை ஏமாற்றத்தானே! அந்த உத்திரவு பாட்டுக்கு ஏட்டிலேதானே இருக்கு, உங்களுக்கு செல்வாக்கு இல்லாமலா உங்க வீட்டுப் பையனை ஏதோ ஒரு குற்றத்துக்காக போலீஸ் லாக்அப்பிலே வச்சிருந்ததைப் பொறுக்க முடியாம போலீஸ் ஸ்டேஷனுக்கே போயி, அதிகாரிகளைத் திட்டோ திட்டுன்னு திட்டி, லாக்அப்பிலே இருந்த பையனை நீங்களே பலாத்காரமா விடுவிச்சுக்கிட்டுப் போனீங்க? இப்ப கூட கேள்விப்பட்டேனுங்களே — ஒரு ஆஸ்பத்திரி பெரிய அதிகாரி நீங்க சொன்ன ஆளுக்கு வேலை கொடுக்லேன்னு டெலிபோன்லகன்னு பின்னுன்னு கர்ணகடூரமா திட்டி, அந்த ஆஸ்பத்திரியே ஸ்டிரைக் பண்ணிச்சே; இப்ப உங்களைப்போல இருக்கிற எம் எல். ஏ.க்களை என்ன தம்பி பண்ணமுடியும்? கலெக்டர் ஆபீசிலே போயி கலாட்டா பண்றீங்க; தாசில்தார் ஆபீசிலே போயி தடபுடல் பண்றீங்க? உங்க ராஜ்யம் தானே நடக்குது இப்பா! என்கிட்ட பொய் சொல்றீங்களே செல்வாக்கு இல்லேன்னு'

எம். எல், ஏ.:

பாலம்மா! அந்தக் கதையெல்லாம் கிடக்கட்டும். இப்ப உங்களுக்கு என்னவேணும்?

பாலம்மா;

உங்களைச் சேர்ந்த ரெண்டுஆளுகள் என் கிட்டே சும்மா வம்பு பண்ணுறாங்க — இப்ப கூட வம்பு பண்ணத் தான் வந்திருக்காங்க!

எம். எல். ஏ:

யார் அவுங்க?

பாலம்மா:

பச்சை குத்தினவுங்க தான்! அண்ணாச்சி! நொண்டி! ரெண்டு பேரும்!

எம். எல். ஏ.,

ஓ, அவுங்களா? நம்ம பசங்கதான்! இப்ப அங்க இருந்தா அவுங்களை என்கிட்டே டெலிபோன்ல பேசச் சொல்லுங்க!

பாலம்மா:

இதோ! கொஞ்சம் இருங்க!

(பாலம்மாள் ரிசீவரைக் கீழே வைத்துவிட்டு அவசரமாக வெளியே சென்று கதவைத் திறக்கிறாள். அவள் எதிர்பாராத விதமாக — சுந்தரமும் வேலனும் அவள் முன்னால் நிற்கிறார்கள்)

பாலம்மா:

நீங்களா?...

(மன ஆறுதலுடன் கேட்கிறாள்)

டெலிபோன் ரிசீவர் கீழேஇருப்பதைக் கவனித்துவிட்ட சுந்தரம், பரபரப்புடன் சென்று அதை எடுத்து

(2-ம் பக்கம் பார்க்க)



புனிதராஜ்யம்...

(முதற் பக்கத் தொடர்ச்சி)

சுந்தரம்: — அலோ! (என்கிருன்)

எம். எல். ஏ.:

யாருடா அது? அண்ணுச்சியா?

(சுந்தரம் சமாளித்துக் குரலை மாற்றிக் கொண்டு)

சுந்தரம்: ஆமாங்க! நான்தான்

அதற்குள் பாலம்மாள் டெலிபோன் ரிசீவரைப் பிடுங்க ஓடுகிருள். வேலன் தன் கையை அவளுக்குக் குறுக்கே நீட்டி, அவளை மிரட்டித் தடுக்கிருன். அவனது உருட்டும் விழிகளைக் கண்டு பாலம்மாள் அசைவற்று நிற்கிருள்)

எம். எல். ஏ.:

(தொலைபேசியில்) என்னடா அண்ணுச்சி அங்கே நொண்டியும் இருக்காஞ?

சுந்தரம்: ஆமாங்க ரெண்டுபேரும் தான் இருக்கிருேம்.

எம். எல். ஏ.:

அந்த அம்மா கிட்ட என்னடா கலாட்டா பண்றீங்களாம்?

சுந்தரம்:

அப்படியெல்லாம் ஒண்ணுமில்லிங்க! சுந்தரின்னு ஒரு குட்டியைக் கொண்டாந்து இந்த அம்மாகிட்ட ஒப்படைச்சோம்.

எம். எல். ஏ.:

ஓ! சுந்தரியா? அவ தான் தப்பிச்சு ஓடியாந்துட்டாளே!

சுந்தரம்:

[திகிலுடன்]

அது உங்களுக்கு எப்படித் தெரியுங்க?

எம். எல். ஏ:

அவள் அந்த வீட்டை விட்டு ஓடி, ஒரு ஆட்டோ ரிக்ஷாவிலே ஏறிகிட்டு தியாகராய நகர் பக்கம் போனுள்! அப்ப நான் அந்த வழியா கார்ல வந்தேன். ஆட்டோவில் இருந்த அழகியைப் பார்த்தவுடனே காரை கொண்டு போய் குறுக்கே நிறுத்தினேன். நம்ப ஆளுங்களை காரிலேயிருந்து இறக்கி, ஆட்டோ டிரைவரை அடிச்சுப் போட்டுட்டு அவளைத் தூக்கிட்டு வந்துட்டேன்

சுந்தரம்;

[சமாளித்தவாறு]

பரவாயில்லை! பலே!பலே! இப்ப அவ என்ன ஆனுள்? எங்கே இருக்கிரு?

எம். எல். ஏ.

என் பங்களாவிலே தான் இருக்கிரு! ஆனு ரொம்ப பிடிவாதக் காரியா இருக்கிரு? கிட்ட நெருங்கினுல் கழுத்தை நெறிச்சி கொன்னுடுவேன்னு பயமுறுத்துரு?

சுந்தரம்:

[முகத்தில் பல மாற்றங்கள் ஏற்படுகின்றன]

நாங்க வந்தா அவளை வழிக்குக் கொண்டு வந்துவிடுவோம். வரட்டுமா?

எம். எல்.ஏ :

ஓ வாங்க!...

சுந்தரம்: உங்க விலாசம் மறந்துபோச்சுங்களே...'

எம். எல் ஏ. ;

என்னடா இது பகல் நேரத்திலே கூட வா விலாசம் தெரியாது?... சரி... சரி... அந்தப் பாலம்மாகிட்ட என் விசிட்டிங்கார்டு இருக்கும். அதை வாங்கிப் பாரு' என் விலாசம் தெளிவா இருக்கும்!

சுந்தரம்: சரிங்க!

[டெலிபோனை வைத்துவிட்டு]

சுந்தரம்:

(பாலம்மாளிடம்] அம்மா .. இப்ப நான் பேசிகிட்டு இருந்தேனே அந்த எம். எல். ஏ. விலாசம்உங்க கிட்டே இருக்குதாம்' அதைக் கொடுங்க!

பாலம்மா:

அதெல்லாம் இல்லே!

சுந்தரம்:

இப்ப கொடுக்க முடியுமா? முடியாதா?...

(பாலம்மாள் மிரண்டு போய் மேசையைத் திறந்து விசிட்டிங் கார்டைத் தருகிருள்...)

சுந்தரம்; ரொம்பநன்றி. வர்ரோம்!

அவர்கள் போனதும் பாலம்மாள் அவசரமாக எம். எல். ஏ. முநுகசாமிக்கு டெலிபோன் செய்து "அலோ" என்கிருள். தெரு வாசல் வரையில் சென்ற வேலன் திரும்பிவந்து டெலிபோனைப்பிடுங்கி அதைக் கீழே போட்டு உடைக்கிருன்.

வேலன்: பாலம்மா! இதோ உன் வீட்டுப் பூட்டும்சாவியும் என் கையில் தெருக்கதவையும் கொல்லைக் கதவையும் பூட்டிக் கொண்டு போகிருேம்! உள்ளேயே கிடந்து, பகவத் நாம பஜனை செய்து கொண்டிரு!

[வேலன் வேகமாக வெளியேறி கதவுகளைப்பூட்டிவிட்டு, சுந்தரத்துடன் போய்விடுகிருன். பாலம்மா, திருதிருவென விழிக்கிருள்)

(தொடரும்)

வாயில்லா ஜீவன்களாவது வெற்றி பெறட்டும்!

வருகிற மார்ச் 5 ல் சட்டமன்றக் கூட்டத் தொடரின்போது எல்லா மாவட்டத் தலைநகரங்களிலும், சென்னையில் அரசாங்கத்தலைமைசெயலகத்தை நோக்கியும் 3 ஆயிரத்துக்கு மேற்பட்ட ஆடு. மாடு. கோழிகளுடன் ஊர்வலமாகச் சென்று ஆர்ப்பாட்டம் நடத்துவது என்று கால் நடை ஆய்வாளர்கள் முடிவு செய்துள்ளனர்.

தங்களின் நீண்டநாள் கோரிக்கைகள்பற்றி அரசின் கவனத்தை ஈர்க்கத் தாங்கள் இவ்வாறு செய்வதாகத் தமிழ்நாடு கால்நடை ஆய்வாளர்கள் சங்கம் ஒரு செய்திக் குறிப்பில் தெரிவித்துள்ளது.

பேராசிரியர்கள், தொழிலாளர்கள், விவசாயிகள், அனைத்துக் கட்சியினர், நெசவாளர்கள். தாழ்த்தப்பட்டோர், என். ஜி. ஓ க்கள் — ஆகிய அத்தனை தரப்பினரும் ஊர்வலங்கள் நடத்தியாகிவிட்டது.

ஊம்!...

புரட்சியார் அசைவதாக இல்லை!

பொறுத்திருந்து பார்ப்போம், இந்த வாயில்லா 'ஜீவன்'களாவது வெற்றி பெறுகின்றனவா என்று!

உத்தமரைப் போலவும் உபதேசியைப் போலவும்

'உத்தமரைப் போலவும் உபதேசியாரைப் போலவும் பேசுவதாலேயே உண்மைகளை மறைத்துவிட முடியாது. ஒன்றைச் சொல்லி விட்டுப் பிறகு அப்படிச் சொல்லவில்லை என்று சொல்வதும், அந்தக் கருத்தில் சொல்லவில்லை என்று திசைதிருப்பிப் பேசுவதும் உங்களுக்கு வாடிக்கையான விஷயம் என்பதைக் கடந்த கால நிகழ்ச்சிகள் நாட்டிற்கு நிரூபித்துக்கொண்டிருக்கின்றன.

என் உயிரைப் பற்றிய அச்சத்தை நான் வெளியிட்டதாக விஷமத்தனமான முறையில் வாசகத்தை அமைத்து, அதற்காக எனக்கு 'செக்யூரிட்டி' ஒருவரை நியமித்திருப்பதாக 11-2-79 அன்று எனக்கு எழுதிய கடிதத்தில் குறிப்பிட்டிருந்தீர்கள். நான் என் உயிரைப் பற்றி அச்சங்கொள்பவனுமல்ல, கவலைப்படுபவனுமல்ல.

—முதலமைச்சருக்கு எழுதிய கடிதத்தில் (18-2-79) தமிழினத் தலைவர் கலைஞர்.

"ஒரு சின்னஞ் சிறிய கதை"

ஆயுள் கைதி புதிதாக வந்தவனைப் பார்த்துக் கேட்டான் —

'என்ன கேஸ்?'

'சாராயம்!'

'சீ சப்பானிப் பயல்!'

சாராயம் சொன்னது —

'அண்ணே, நீங்க என்ன கேஸ்?'

'கொலை!' — ஆயுள், மீசையை முறுக்கிச் சொன்னது.

பதினாலு வருடம் ஓடியது.

புதிதாக ஒருவன் வந்தான்.

ஆயுள் கேட்டது —

'தம்பி என்ன கேஸ்?'

'கொலை!'

'பாவம், உன் தலையெழுத்து!.. ம்... எல்லாம் அந்த முருகன் செயல்!'

— ஆயுளின் மீசை தொங்கிக்கிடந்தது.

— இது, சிறையில்!

— வில்லிநாடன்

வந்து ஒருமித்தகுரலில் இந்தித் திணிப்பைக் கண்டிக்கிற நிலையில் மத்திய அமைச்சரின் மேற்கண்ட பேச்சு உதிர்க்கப்படுகிறது!

திருச்சியில் இலட்சோப லட்ச மக்கள் கூடிய இந்தி ஆதிக்க எதிர்ப்பு மாநாடு நடந்து முடிந்தும், சனவரி 26-ல் நாடெங்கும் மாபெரும் கருஞ்சட்டை, கறுப்புக்கொடி ஊர்வலம் நடத்தி முடிந்தும் இந்த எழுச்சிச் செய்திகள் மத்திய அரசுக்கு உளவுத் துறைக்குச் சென்றிருந்தும் —

மத்திய அமைச்சர் ஏற்பட்டிருக்கிற 'இந்திஏகாதிபத்திய எதிர்ப்பு' உணர்வை நினைத்துப் பார்க்காமல் ஆணவத்துடன் பேசியிருக்கிறார் தென்னாட்டில்!

அவரது இந்த ஆணவ உரையினை சண்டேஸ்டாண்டர்டு (18 2–79) தெளிவாக வெளியிட்டுள்ளது.

"இந்தி பிரச்சாரசபை நடத்திய பிராத்மிக் முதல் பிரவீண் வரையுள்ள இந்திப் பரீட்சைகளை 25,000 மாணவர்கள் தமிழ் நாட்டில் எழுதியுள்ளார்கள் இதிலிருந்தே தெரிகிறது தமிழ்நாட்டு மக்கள் இந்தியை ஏற்றுக் கொண்டு விட்டார்கள் என்று!

— இதுவும் மத்திய அமைச்சரின் உரையே!

"வேலையில்லாதோர் பட்டியல் வேகமாக பரவுகிறது"

1977-ஆம் ஆண்டு இறுதியில் வேலையில்லாத இளைஞர்களின் எண்ணிக்கை ஒருகோடியே ஒன்பது இலட்சமாகும்,

1978 ஆகஸ்ட் திங்களில் அந்தஎண்ணிக்கை ஒரு கோடியே இருபத்தொரு இலட்சமாக உயர்ந்துவிட்டது.

இந்தத் தகவலை வேலைவாய்ப்புஅலுவலகம் அறிவித்தது.

ஸ்டேட்ஸ்மேன் பிப்ரவரி-11

இங்கே கொடிகட்டிப் பறக்கிறது!

இவ்வளவும் பேசிவிட்டு, தட்சிண பாரத் இந்திப் பிரச்சார சபை இந்தியைப் பரப்புகின்ற முயற்சிக்கு ஆக்கமும் ஊக்கமும் தரப்படும் என்று கூறியுள்ளார்.

இந்திப் பிரச்சாரசபையின் புத்தகங்கள் மூலமாகவேதான் இந்தி கற்றதாகவும். கூறியுள்ளார். அதாவது, இந்தி படிக்

இனிமேல் தமிழ் நாட்டுக்கு வருகிற மத்திய அமைச்சர்கள் சொந்த நாக்கோடு டில்லிப் பட்டணத்திற்குத் திரும்பிப் போகிற 'ஜாதகம்' இல்லையெனக் கருதத்தான் வேண்டும். இல்லையென்றால் 'சினிமா கோரஸ்' போல் இப்படி இந்திக்கு ஆலவட்டம் தூக்கிக் கொண்டு ஒன்று போல் மத்திய அமைச்சர்கள் பேசுவார்களா?

எரிகிற நெருப்பில் எண்ணெய்!

'இந்திக்கு எதிராக எழுகிற உரத்த குரல் தமிழ்நாடு அரசாங்கத்திடமிருந்து வருகிறதே தவிர தமிழ்நாட்டு மக்களிடமிருந்து அல்ல!

— இந்த வாசகங்கள் இந்திய அரசின் கல்வியமைச்சர் திருவாளர் பி. சி. சந்தர் திருவாய் மலர்ந்தருளியவை

அருளிய இடம் ஆந்திர மாநிலத்தின் தலைநகரான ஐதரபாத்!

அருளிய நேரம் —

என் தாய் மொழி தெலுங்கினை நான் வெகுவாக நேசிக்கிறேன். இந்தி மொழி வெறியால் இந்தியா சிதறுண்டு போகக் கூடாது' என்று குடியரசுத் தலைவர் திரு. சஞ்சீவி ரெட்டி அவர்கள் துணிகரமாகப் பேசி முடித்திருக்கிற நான்கைந்து தினங்களுக்குள்'

இந்தியை எதிர்ப்பது தமிழ் நாட்டு மக்கள் அல்லராம்; அரசாங்கம் மட்டுமே எதிர்க்கிறதாம்!

மத்திய அமைச்சரின் தமிழ் நாட்டு நிலவரம் பற்றிய கண்டுபிடிப்பும். தமிழக மக்களின் மனோநிலை பற்றிய படப்பிடிப்பும் அபாரமாக இருக்கின்றது!

பெரும்பான்மை தந்த நிலைக்களனால் பாராளுமன்றத்தில் அமைச்சராகிவிட்ட பெருமையால் - அந்த அதிகாரச் செருக்கில் ஓங்கிப் பேசியிருக்கிறார் சந்தர்!

நாம் கோபப் படாமல் எப்படியிருக்க முடியும்?

பலம்வாய்ந்த எதிர்க் கட்சியாக விளங்கும் தி. மு. கழகம் மட்டுமல்ல, அனைத்துக் கட்சிகளுமே இந்தி எதிர்ப்புக் குரல் எழுப்பினாலொழிய தமிழ் நாட்டு அரசியலில் இடத்தைத் தக்கவைத்துக் கொள்ள முடியாது என்ற நிலைக்கு

அரசியல் களத்தில் மீண்டும் சஞ்சய்

"மராட்டிய மாநிலத்தைச் சார்ந்த இந்திரா காங்கிரசுசட்டப்பேரவை உறுப்பினர்கள் 36 பேர் இந்திரா காந்தியை பார்த்துவிட்டுப் போக வந்தவர்கள் சஞ்சய் காந்தியைச் சந்தித்தனர். மராட்டிய மாநில கட்சி நிலவரம் பற்றி அரை மணி நேரம் பேசினர்.

இந்தத் தகவலை சஞ்சய் காந்தியைச் சந்தித்த எம். எல். ஏ.க்களில் ஒருவர் தெரிவித்தார்.

ஸ்டேட்ஸ்மேன் பிப்ரவரி-10

தென்னிந்தியாவில் உள்ள இந்தி எழுத்தாளர்களை ஊக்கப்படுத்துவதற்கான அமைப்பு நடத்திய கூட்டத்தில் அமைச்சர் பேசியிருக்கிறார்.

'இந்தியாவின் தேசிய மொழியாக ஏற்றுக்கொள்ளப்பட்ட இந்தி மொரீசஸ், பிஜி, இங்கிலாந்து. அமெரிக்கா, கனடா, ரஷியா போன்ற நாடுகளிலும் வெகுவாக வளர்ந்திருக்கிறது.'

— எனக் கூறியுள்ளார்.

இந்தியைப் பெருமைப்படுத்துவதற்காக சொல்லப்படுகிற பொய்யில் வாஜ்பாயையும் முந்திக் கொண்டார் சந்தர்

'குறிப்பிட்ட காலத்திற்குள் சரியான கவனிப்போடும் உணர்ந்து கொள்கிற விதத்தோடும் இந்தி ஒவ்வொருவரின் மொழியாக, இந்தநாட்டில் ஆகிவிடும்!

— இது அவரது பேச்சின் தொடர்ச்சி

அதாவது இந்தி, இந்தியாவின் ஆட்சி மொழியாவதை எந்த எதிர்ப்புணர்ச்சியாலும் போராட்டங்களாலும் தடுக்க முடியாது என்ற சர்வாதிகார முடிவை அமைச்சர் அறிவித்திருக்கிறார்

இந்தி வெறியர்களின் போக்கு இந்திய அமைச்சரின் வார்த்தைகள் மூலம் பட்டவர்த்தனமாகப் புலப்படுகிறது.

"சில மாநிலங்களிலிருந்து குறிப்பாகத் தெற்கிலிருந்து எழுகின்ற இந்தி எதிர்ப்பு என்பது உண்மையானதல்ல! அரசியல் உள்நோக்கம் கொண்டதாகும்! அரசியலுக்காகவே ஆகும்!"

— அமைச்சரின் கற்பனை

காதவர்கள் மத்திய அமைச்சரவையில் இருக்க முடியாது. என்பதை சூசகமாகத் தெரிவித்துள்ளார்

இப்படிப்பட்ட பொய் வாதங்களால், தவறான கணிப்புகளால் மத்திய நாற்காலி நாயகர்கள் இன்று நேற்றல்ல, பல ஆண்டுக்காலமாக — ஒருவர் இருவரல்ல பலநூறு பேர் முழங்கியிருப்பதும். பின்னர் தென்னக மக்களின்

ச. அமுதன் பி.ஏ.

கொதிப்பில் அவர்கள் இருக்கிற இடங்கள் தெரியாமற் போனதும் வரலாறு சந்தித்த நிகழ்ச்சிகளாகும். சந்தரும் அதற்கு விதிவிலக்கல்ல.

நம்மால் மதிக்கப்படுகிற பாபு ஜகஜீவன்ராம்கூட இதே கோட்டில் இந்திதான் தேசிய மொழி என முழங்கியிருக்கிறார் மூளைக்காய்ச்சல் அவரையும் விடவில்லை! அரசியல் வானின் மேற்கு அடிவானத்தில் விழுந்து கொண்டிருந்த கோவிந்த வல்லப பந்த்முதல் தப்புத் தாளங்கள் போட்டுக் கொண்டிருக்கிற மொரார்ஜி வரை இந்தக் கேலிக்குரிய வார்த்தைகளை உதிர்த்து விட்டார்கள்

அவர்களின் பாதையில் மத்திய கல்வி அமைச்சரும் சிறு பிள்ளைத்தனத்தைக் காட்டியுள்ளார்.

தமிழ் நாட்டு மக்கள் இந்தியை எதிர்க்கவில்லையாம்.

சிரிக்கவா தோன்றுகிறது?

மொரார்ஜி தேசாய் அவர்கள் வாங்கிக் கட்டிக் கொண்டு இன்னும் ஒரு மாதம் கூட ஆகவில்லை. அதற்குள் கல்வியமைச்சர் உண்மைக்குத் திரையிட்டு வாய்க் கொழுப்பைக் காட்டியிருக்கிறார்.

மத்திய அரசுக்கு தி. மு. கழகம் விடுத்திருக்கிற எச்சரிக்கை சாதாரணமானதல்ல இதனை அமைச்சர்கள் புரிந்து கொள்ள வேண்டும்.

இந்திஏகாதிபத்திய எதிர்ப்பில் தமிழ் நாட்டு வீரர்கள் எட்டுப்பேர் தங்கள் உயிரை பலிபீடத்தில் பணயம்வைத்துவிட்ட வரலாற்றை அவர்கள் அவ்வளவு எளிதாக மறந்துவிடக் கூடாது

தென்னாட்டு மக்களின் இதயங்களைப் புரிந்து கொள்ளாத வட இந்தியத் தலைவர்கள் குடியரசுத் தலைவரின் மனதில் கொந்தளித்துக்கொண்டிருக்கும் உணர்வுகளையாவது புரிந்து கொள்ள வேண்டும்!

இந்தி ஏகாதிபத்தியத்தை முறித்திடும் முயற்சியில், தமிழகம் தனது போர்க் கேடயத்தை. வீரவாளை கீழே போட்டுவிடவில்லை என்பதை! ஐந்தாண்டுக் காலப் பதவி மன்னர்கள் உணர்ந்தாக வேண்டும்!

மத்திய அமைச்சர்களே — தமிழ் மக்களின் இறுதி எச்சரிக்கை உங்களுக்குச் சிவப்பு விளக்காக்கப்படுகிறது'

நீங்கள் எரிகிற நெருப்பில் எண்ணெய் வார்த்துக் கொண்டிருக்கிறீர்கள்!

மீண்டும் எச்சரிக்கை!

தமிழகம் போர்க்களமாகும்!

இனி எங்களுக்குத் தூக்கமில்லை

பார் பார்! பட்டணம் பார்!

'என்ன படம் தெரியுதா?'

'தெரியுது சார்!'

'யார் படம்?'

'சரோஜாதேவி?'

'இப்போ யார் படம்?'

'சண்டைக் காட்சி!'

'போதும் பத்து பைசாவுக்கு! அடுத்த பையா வா!'

—பத்துக்காசுக்குப் படங்காட்டிப் பிழைக்கிறவன்கூட அதனைத் தன் வயிற்றைக் கழுவுவதற்காகத் தொழிலாக ஏற்றுக்கொண்டான்.

அரசியல் களத்தில் இன்று அதே வேலையைச் சிலபேர் செய்யத் தொடங்கியிருக்கிறார்கள், அந்த வேலையைத் தமிழநாட்டு மக்கள் வெகுவாக ரசித்துக் கொண்டிருக்கிறார்கள்!

அரசியலில் விளையாடுகிறவர்களின் சித்து விளையாட்டுக்கள் சீக்கிரம் அம்பலமாகி விடுவதை யாராலும் தடுக்க முடியாது!

தமிழனின் தன்மானத்தோடு விளையாடுகிறவன் யாரும் தப்பிக்க முடியாது

தமிழ்ச் சமுதாயத்தின் பாதுகாப்பிற்காக இந்தி ஆதிக்கத்தை ஒழித்துக்கட்டி தமிழையும் ஆட்சிமொழியாக்குவதற்காக எந்த இதயம் தயாராக இருக்கிறது என்று தேடுகிற வேலையில் ஒரு குரங்காட்டிக்குக் கூட இல்லாத சாமர்த்தியங்களையெல்லாம் காட்டி ஒரு கூத்துக் களத்தைப் படைத்துக் கொண்டிருக்கிறார்கள்.

தமிழ்நாட்டில் ஏற்பட்டிருக்கிற எழுச்சியில் அந்த அரைவேக்காட்டு அரசியல் மேதாவிகளுக்கு நாம்சொல்லியாக வேண்டும்.

தந்தை பெரியாரின் வழியில் —

தனயன் அண்ணாவின் நிழலில் —

இந்தச்சமூகத்திற்காக ஒரு மனிதன் தூங்காமல் விழித்துக் கொண்டு, தனது இதயத்தைப் பேசவைத்துக்கொண்டிருக்கிறார்!

அந்த இதயத்திற்குச்சொந்தக்காரர் பதினைந்து வயதிலேயே 'தமிழ் வாழ்க! இந்தி ஒழிக!' என்ற பதாகைரந்தித் திருவாரூர் தெருக்களிலே பவனி வந்தவர்!

அந்த மாமனிதன் எட்டுக் கோடி தமிழர்களின் இதய சிம்மாசனத்தில் இடம் பெற்றுக் கொண்டு, இன்று இதயத்தைப் பேசவைத்துக் கொண்டிருக்கும் இடம கோபாலபுரம்!

இன்னுயிரிந்தும் இன்பத் தமிழ்காக்கும் அந்தத் தலைமகனுக்குப் பின்னால் இலட்சோபலட்ச வாலிபர்கள் கருஞ்சட்டையணிந்து. கன்னித் தமிழ்காக்கக் கழுமரம் ஏறிடவும் அணிவகுத்துக் கொண்டு தயாராக இருக்கிறார்கள்.

இரும்புக் கவசமணிந்து இடிமுழக்கம் செய்துவரும் அரச தர்பார்களின் கொடிய கரங்களைக் குவிக்கச் செய்து, மண்டியிட வைக்கும் மந்திரம் அந்தத் தலைவனின்பட்டாளத்திற்குண்டு!

இதைப் புரிந்து கொள்ளாதோர் நமது இதயங்களைச் சோதித்துக்கொண்டிருக்கிறார்கள்.

ஆட்சிக்கட்டில் ஏறிய போது,

உன் இதயத்தைத் தந்திடண்ணா; வரும்போது நான் உனக்குப் பத்திரமாகத் தருவேன் என்று யாசித்து பெற்ற தலைமகன் —

பிற்படுத்தப்பட்ட மக்களின் பிரதிபலிப்பாகப்போர் முழக்கம் செய்யும்பைந்தமிழ்ப் பாகன், அண்ணாவின் தம்பி தமிழினத் தலைவர் கலைஞர், பெற்ற இதயம் பெரியார் இதயம்;

உடலில் இரத்தம் எடுத்து கருப்பில் சிவப்பிட்டு. இலட்சியக் கொடியினைத்திராவிடர் இயக்கத்திற்குத் தந்த தலைவனை இதயம் சோதிக்கப் புறப்பட்ட மகானுபவர்களுக்கு முன்னால் ஒரு இதயம் பேசுகிறது!

'என் உடன் பிறப்புக்கள் உறையிடைத் தூங்கும் வாட்கள் அவற்றின் கூர்மை அந்தத் தமிழ்ச் சமூகத்தைப் பார்த்துக் கொக்கரிக்கிற இந்தி ஏகாதிபத்தியத்தைத் தூள் தூளாக்கும்!

உயர் சாதி என நிமிர்ந்து நிற்போர் அந்த மாமனிதனின் இதயத்தில் கொடிய விஷத்தைக் கொட்டிடத் துடிக்கிறார்கள். அந்த சூதுமதி படைத்தோருக்கு நாலரைக் கோடி தமிழ் மக்கள் பறையறைந்து கூறுவது எங்களைக் காத்திட வந்த தலைவனுக்கு சிறு ஆபத்தென்றாலும் இந்த நாட்டில் இரத்த ஆறு ஓடும்' என்பது தான்!

'தலைவா!'

நீ பெற்ற வலிமை பெரியாரிடம்!

நீ பெற்ற பொலிவு அண்ணாவிடம்;

நீ பெற்ற பெருமை இலட்சக்கணக்கான உன் உடன் பிறப்புக்களிடம்;

நீ பெற்றபுகழ் உலகு தழுவி வாழும் தமிழ்ச் சமுதாயத்திடம்!

திராவிடர் இயக்கத்தின் வரலாற்றைச் சிதைக்க நினைப்போருக்கு உன் இதயம் ஈட்டி முனையாகிறது!

இரவை நித்திய பகலும் பகலை முடிக்கும் இரவும் பணிகளைத்தான் பார்த்துக் கொண்டிருக்கின்றன, இத்தனை துன்பங்களையும் உன் இதயம் எப்படித்தான் தாங்கிக் கொள்கிறதோ? கல்லெடுத்துக் கொல்ல வரும் பகைவர்களைத் தமிழ்ச் சொல்லெடுத்து வெல்லவரும் இதயமே நீ பெற்ற இதயம்; அதுதான் பெரியாரின் இதயம்!

உன் இதயம் பேசும்போது நாங்கள் கேட்கிறோம்'

உன் இதயம் ஆணையிடும் போது நாங்கள் பணிகிறோம்,

எங்கள் இதயமே, உன்னைக் காத்திட நாங்கள் இலட்சக் கணக்கில் பலி பீடம் ஏறத் தயார!

பேசும் பேனாவை ஊர்ந்திட விட்டு, 'உடன் பிறப்பே.' என எழுதிடும் இதயமே இனி எங்களுக்குத் தூக்கமில்லை; எங்கள் இதயங்களில் சோம்பல் துளியுமில்லை'

விடுதலை இரத்தினம்

★

வேண்டாம் விளையாட்டு!

அன்னப்பாலுக்கு சிங்கியடித்தவன் ஆவின்பாலுக்கு சக்கரை கேட்டானாம். அமைச்சராவதற்கு முன் அமைதியாக இருந்த வாஜ்பாய் அமைச்சரானபின்பு அதிகமாக அவசரப்படுகிறார். இந்தி உலக மொழியாம். வேகமாக வளர்ந்து வருகிறதாம். உலகம் முழுவதும் இந்தி பரவ வேண்டுமாம். வாஜ்பாய் கூறுகிறார்.

இந்தி பரவக்கூடாதுஎன்று நாம் கூறவில்லை. பெருந்தன்மையின் சின்னம் தமிழன். ஆனால் இந்தியில் எத்தனையோ வகை இருப்பதாக மொழியறிஞர்கள் கூறுகிறார்களே, அதில் எவ்வகை இந்தி வேகமாக வளர்வதாக அமைச்சர் கூறுகிறார்? ஐ. நா. மன்றத்தில் இடம் பெறச் செய்ய முயலும் இந்தி எது? வானொலியில் பேசப்படும் இந்தி எனக்கே சிறிதும் புரிவதில்லை என்று நேருபிரான் கூறினாரே, அந்தஇந்தியையா? ஹைஹை என்னும் குதிரைக் காரனின் மொழியையா! இந்தக் குவலயம் அறிய வேண்டும் என்று வாஜ்பாய் துடியாகத் துடிக்கிறார்.

இந்திக்குச் செய்கிற செலவில் பாதிக்குமேல் இந்தி பேசாத குடிமக்கள் தரும் வரிப்பணமன்றோ? அடுத்த வீட்டு நெய்யே என் பெண்டாட்டி கையே என்று வாஜ்பாய் நினைப்பது நியாயமா? வாஜ்பாய் மொழி வெறியரா? அல்லது திராவிட முன்னேற்றக் கழகப் பீரங்கிகள் மொழி வெறியர்களா?

ஆங்கிலத்தை ஒரேயடியாக அகற்றப் போகிறார்களாமே? ஆங்கிலம் இல்லாமல் வாஜ்பாய் இன்று சீனா சென்று சிறப்புப்பயணம்மேற்கொள்ள முடியுமா? சீனனும் மொழி வெறிகொண்டு தன் மொழியில் சிங் பிங் லியோ குயோ என்று பேசினால் வாஜ்பாயால் குய்யோமுறையோ என்று அலறுவதைத் தவிர என்ன செய்ய முடியும்? இந்தியில் மட்டும் பேசினால் கார்ட்டர் கடன் தருவாரா?

ஐ. நா. மன்றத்தில் இந்தியைப் புகுத்த இலட்சக்கணக்கில் செலவு செய்யும்இலட்சிய வீரர்களே! இந்தியாவில் வாழும் மக்களை என்னபூமான்கள், சீமான்கள்என்றுநினைத்துவிட்டீர்களா? வயிற்றுக்கின்றி துடித்துக் கொண்டிருக்கிறான் நடுத்தெருவில் இந்தியன். இந்நிலையில் இலட்சக்கணக்கில் செலவாம்—குடல் கூழுக்கழுகிறதாம். கொண்டை பூவுக்கழுகிறதாம்.

சனதாவை சிதறடிக்கத் துணிந்துவிட்டார்கள் மத்திய அமைச்சர்கள். அவர்களில் வாஜ்பாய் அவர்கள் தன்கட்சி வரலாற்றின் இறுதிப் பகுதியை முனைப்பாக, மிக முனைப்பாக, மிக மிக முனைப்பாக எழுத முனைந்திருக்கின்றார். ஆங்கிலம் இருப்பது நமக்கு அடிமை உணர்வை ஏற்படுத்துமாம். இந்தியாவின் அன்றைய பாரம்பரியம் சிதைந்து விடுமாம். வாஜ்பாய் சொல்வதை நாம் கேட்டால் அவர் உட்பட நாமனைவரும் அரை நிர்வாணமாகத்தானிருக்கவேண்டும். அக்கால இந்தியன் அப்படித்தானே இருந்தான். இவர்களுக்கு அஞ்சித்தானே பாகிஸ்தான் தனியே சென்றது. உலகப் படத்தில் இன்னும் இந்தியா குறுகவேண்டும் என்பது உங்கள் எண்ணமா? தெரியாமல் தான் கேட்கிறோம். இந்தியாவைப் பிரித்தே விடவேண்டும் என்று முடிவு செய்து விட்டீர்களா?

இந்தி ஐ. நா. மன்றம் செல்ல வேண்டுமா? வாஜ்பாய் அவர்களை ஒன்று கேட்கிறோம். நேற்றுப் பிறந்த பெண்தானே இந்தி? அது வளர வேண்டும். மலர வேண்டும். அதற்குள் ஏனிந்த துடிப்பு. பச்சையாகவே கேட்கிறோம். வயதுக்கு வராத பெண்ணால் எப்படி குழந்தை பெறவியலும்? அவசரப்படாதீர். அருவருப்பாக இருக்கிறது.

இரா. நரேந்திரகுமார்

(தொடர்ச்சி 9-ம் பக்கம்)

படை திரட்டுவோம்

— கவிஞர் மணிமொழி —

படை திரட்டுவோம் — இந்திப்
பகை விரட்டுவோம் — வீர
நடை முடுக்குவோம் — வெற்றி
நகை முழக்குவோம்... (படை...)

திங்களோடு தென்றலோடு
வந்தமொழி தமிழ்மொழி
எங்கிருந்து வந்தவர்க்கும்
வாழ்வளித்த பெருமொழி
சிங்கமக்கள் பெற்றெடுத்த
சீருலாவும் திருமொழி
பங்கமொன்று வருகுதெனில்

பார்ப்பதற்கோ நம்விழி? (படை...)
ஆண்ட தமிழ் மீண்டும் ஆள
வேண்டுமிந்த மண்ணிலே
மாண்டபுகழ் மீண்டுமிங்கு
மலரவேண்டும் கண்ணிலே
தோன்றின்புகழோடு நீயும்
தோன்றவேண்டும் தமிழனே
ஈன்றதாயின் நெஞ்சினிக்க
ஏற்கவேண்டும் சபதமே (படை...)

பேராசிரியர்கள் பேசுவது
காதில் விழுகிறது!

காவல் நிலையத்தில் கல்லூரி ஆசிரியர்கள்!

சேயிழையார் உட்படப்பலரும் சிறையில் தள்ளப்படும் சூழ்நிலை! அதுகண்டு, ஒட்டுமொத்தமாகவே ஆசிரியர் சமுதாயத்திடையே ஒருவகையான உள்ளக் குமுறல்! மாணவர்கள் மத்தியிலும் மனப் போராட்டம்! ஏன் இந்தக் கோலம்? எண்ணிப் பார்க்க வேண்டும்.

சென்ற ஆண்டு கல்விமான்யத்தில் பேசிய அமைச்சர் அரங்கநாயகம் சில அறிவிப்புகளைத் தந்தார்.

"தமிழ்நாட்டிலுள்ள உயர்நிலைப்பள்ளிகளில் 78–79 லிருந்து பதினோராம்வகுப்புநீங்கிவிடும் சுமார் ஏழாயிரம் பட்டதாரி ஆசிரியர்கள் பாதிக்கப்படலாம். இவர்களில் மேல் உயர்நிலைப்பள்ளிகளுக்குத் தகுதியுள்ளவர்களை அப்பள்ளிகளில் எடுத்துக்கொள்ளலாம். ஏனையோரைப் பொறுத்தமட்டில் எவரும் வேலையிழக்காதபடி அரசு பார்த்துக்கொள்ளும்!"

அதே நேரத்தில் மற்றுமோர் அறிவிப்பு:

"10, 2. 3 ஆண்டுப்படிப்பு 1978 ஜூன் முதல் நடைமுறைக்கு வரும். 79 ஜூனிலிருந்து கல்லூரிகளில் புகுமுக வகுப்புகள் நீங்கிவிடும்! இதன் காரணமாகக் கல்லூரி ஆசிரியர்கள் வேலை இழக்காதபடி அரசு பார்த்துக் கொள்ளும்"

இரண்டு அறிவிப்புகளுக்கு

கோ இளங்கோவன்
பி. ஏ. பி. டி. எம். எல். ஏ.

மிடையே உள்ள ஏற்றத்தாழ்வினை. வேறுபாட்டினை. கல்லூரி ஆசிரியர்கள் கவனித்தனர்

வேலை இழக்கும் சூழ்நிலையிலுள்ள கல்லூரி ஆசிரியரின் கணக்கென்ன?

அவர்கள் வேலையிழக்காமலிருக்க அரசு கண்டுள்ள வழியென்ன? வகையென்ன? —கேட்கத் தலைப்பட்டனர்.

உரியபதில் இல்லை; உண்ணாவிரதப் போர் தொடங்கிற்று!

அது கண்டு மிரண்ட அரசு ஆசிரியர்களை அழைத்தது! பேசியது; அறிவிப்பையும் தந்தது:

'31-3-77-இல் பணி புரிந்த ஆசிரியர் அனைவருக்கும் பணிப்பாதுகாப்பு உண்டு என்றது.

உறுதிமொழியினைச் செயல்படுத்தும் திராணி அரசிற்கில்லையெனஉணர்ந்துகொண்ட மதுரை பாத்திமா கல்லூரி, சோழவந்தான்விவேகானந்தா கல்லூரி. திருச்சி ஹோலிகிராஸ் கல்லூரி திருப்பத்தூர் ஆறுமுகம் பிள்ளை சீதையம்மாள் கல்லூரி, சிவகாசி ஐய நாடார் ஜானகியம்மாள் கல்லூரி, நானக்கல்லூரி போன்றவை ஆசிரியர்களைஒருவர்பின் ஒருவராக வீட்டிற்கனுப்பத் தொடங்கின!

அதிர்ச்சியடைந்த ஆசிரியர் கழகங்கள் ஒன்றுகூடி. உட்கார்ந்து பேசி. ஒரு முடிவிற்கு வந்தன.

உறுதிமொழி என்னவாயிற்று? உரத்த குரல் எழுப்பினர் ஆசிரியர்.

வழக்கம்போல் ஒரு 'வழ வழா' பதில்!

அதன் விளைவுதான், காலவரையறையற்ற கல்லூரி ஆசிரியர்களின் உண்ணாவிரதப் போர்!

19–2–79 ல் சென்னையில் 44 பேர்

மதுரையில் 28 பேர்.

உத்தமபாளையத்தில் 45 பேர்.

திருச்சியில் 52 பேர் எனக் கைதாகியகதை. அதனைத் தொடர்ந்து மாணவர்கள் வெளியேற்றம்! கல்லூரிகள் கதவடைப்பு! மீண்டும் போராட்டம்!

20–2–79-இல் நூற்றுக் கணக்கான கல்லூரி ஆசிரியர் கைதாகின்றனர். ஏற்றுநடத்த முடியாமல் கல்லூரிகள் அனைத்தையும் இழுத்து மூடுங்கள் என்ற அரசின் உத்தரவு!

எதிர் வரிசையிலிருட போர் சட்டமன்றில் எடுத்துச்சொன்னால்

நாங்கள் சந்தித்துப் பேசத் தயார்!

எவரும் வேலையிழக்க மாட்டார்கள்!

போராட்டத்தை ஆசிரியர்கள் கைவிட்டுவிட்டுப்பேசமுன்வரவேண்டும்! கல்வியமைச்சரின் நாடக வசனங்கள்!

இம்முறையும் ஆசிரியர்கள் ஏமாறத் தயாராக இல்லை! கல்லூரி ஆசிரியர்களைப் பிரித்தாளும் சூழ்ச்சி பலிக்காது! ஆசிரியர்களுக்கு ஆதரவாக மாணவர்கள் அறைகூவல் விட்டுக்கொண்டிருக்கிறார்கள்!

"ஆசிரியர்களை 'பொதுமக்கள்' பார்த்துக் கொள்வார்கள் என முதலமைச்சர் எம்.ஜி.ஆர் சொல்வாரானால் எம். ஜி ஆரின் பொதுமக்களை மாணவர்களாகிய நாங்கள் பார்த்துக் கொள்ளுகிறோம்!" என மாணவர்கள் விட்ட அறைகூவலை நான் கண்ணாரக் கண்டேன்! காதாரக் கேட்டேன்!

இந்தச் சூழ்நிலையில் தம் பிள்ளைமார்களின் எதிர்காலம் என்ன? பெற்றோர்கள் பேதலிக்கிறார்கள். ஆட்சிப்பொறுப்பிலுள்ளோர் அலட்சியம் காட்டாமல் ஆசிரியர் சமுதாயத்தை அழைத்துப்பேசி, இருக்கின்ற இடர்ப்பாடுகளை எடுத்துச்சொல்லி செய்ய முடிந்ததைக் காலத்தே செய்வதே மேல்! மாறாக, 'உனக்கேன் இந்தக் கவலை! அனைத்து ஆசிரியர்களையும் உட்கார வைத்துச் சோறு போடுகிறேன்!' என அமைச்சர் சொன்னால்,

'உட்கார்ந்து கொண்டு சாப்பிட — WE ARE NOT CHARITY BOYS — நாங்களொன்றும் சத்திரத்துப் பையன்களல்ல' எனப் பேராசிரியர்கள் பேசுவது காதில் விழுகிறது.

வந்த மடல்:

கலைஞர்கடிதம் கண்டோம்; கடமையை தொடருவோம

18.2 79 அன்றைய 'நம் நாடு' இதழில் கலைஞர் அவர்கள் தீட்டிய மடல் கண்டேன்.

கழக ஏடாம் 'நம் நாடு' ஏடு சிறந்திட சிறப்புடன் தொடர்ந்து வெற்றி நடைபோட்டிட பல்லாயிரக்கணக்கான பிரதிகள் மேலும் விற்பனையாகிட எல்லா முயற்சியினையும் கழகத் தொண்டர்கள் ஏற்பார்கள், இது உறுதி. அத்தகைய புனிதப் பணியை மேற்கொள்ளும் கழகத் தொண்டர்களில் நானும் ஒருவன் என உறுதி கூறுகிறேன்.

இந்தி மொழியின் ஆதிக்கத்தை இன்மொழியாம் நம் தமிழ் மொழியின் மேன்மையை இலக்கியத்தில் புதைந்து கிடக்கிற எண்ணற்ற சுவைகளை இணையற்ற தலைவர்களாம் பெரியாரை பேரறிஞர் அண்ணாவை இன்னபிற கவிஞர்களை கலைஞர்களை இன்னுயிரை இயக்கத்திற்காக ஈந்திட்ட தியாக மறவர்களை இன உணர்வை

அத்தனையையும் தாங்கிக் கட்டுரையாய்! கவிதையாய கருத்துக் கோவைகளாய் கிழமை தோறும் வந்து கழகத்தவர்களைத் தட்டி எழுப்பி, தடை பல வரினும், படை பல மிரட்டிடினும், தருக்கர்கள் எச்சரித்திடினும், இழிமொழிகளால் பழிச் சொற்களால் குளிப்பாட்டிடினும், நெஞ்சுரத்தோடு நிமிர்ந்து நின்றிடவும் உறுதுணையாய் – உற்ற நண்பனாய் - ஊன்றுகோலாய் விளங்குவது தானே நம்முடைய நம் நாடு' இதழ்.

தினசரி ஏடுகளைக்கூட மன்றங்களில் கிளைக்கழகங்களில் படித்திடலாம், ஆனால் கழக வார ஏடுகளை ஒவ்வொருவரும் வாங்கியாக வேண்டும். 'நம் நாடு' நான் வாங்குகிறேன் என்று சொல்வதில் பெருமைப்பட வேண்டும்.

கழக ஏடாம் 'நம்நாடு' இதழை வாங்குபவன்தான் தன்னை கழகத்தவன் என்று சொல்லிக் கொள்ள உரிமையுடையவன்.

கழகத்திற்குக் கிழமை தோறும் என்னுடைய நிதியாக ஒரு சிறிய தொகை போகிறது என்று சொல்லிக் கொள்வதில் பெருமை உண்டு.

என்று நண்பர்களை சந்திக்கும் போதெல்லாம், நாலு தோழர்கள் கூடி இருக்கிற இடத்திலெல்லாம் இன்னும் சொன்னால் ஆலையில் தொழில் புரியும் போது, அங்காடியில் பொருள்கள் வாங்கும்போது, கழகக் கூட்டங்களுக்கு சைக்கிளில் பத்துத் தோழர்களோடு செல்லும்போது இப்படிச்சொல்வது — வலியுறுத்துவது என் வழக்கம். சில தோழர்களிடம் 'நம்நாடு' இதழை இரண்டு மூன்று கிழமை படிக்கக் கொடுப்பது! அடுத்த இதழ் வந்து விட்டதா? என்று அவர் கேட்கும் போது, உங்களுக்கு ஒன்று தனியே போடும்படி சொல்லி விடட்டுமா என்று கேட்டு அவரையும் 'நம் நாடு' வாசகராக மாற்றுவது இது என் வாடிக்கை. பற்றுக்குறையைச் சொல்லி 'நம் நாடு' இதழ் வாங்க முடியவில்லை என்று சொல்லுவோருக்கு அவருடைய அனுவசிய அர்த்தமற்ற எத்தனையோ செலவினங்களைச் சுட்டிக் காட்டி பிறகு ஒரு காப்பியையும் ஒரு சிகரெட்டையும் நிறுத்தினால் ஒரு 'நம் நாடு' இதழ் உங்கள் கையில தவழும். கலைஞர் இதயமும் மகிழும், கழகத்திற்கு நிதியும் குவியும் என்று சொல்லுவேன். இந்தப் பணி போதாது; மேலும் தொடர வேண்டும் என்ற கலைஞரின் அன்புக் கட்டளையை படிக்கும்போது. கலைஞர் விரும்புகிற பணியை நாம் செய்துகொண்டிருக்கிறோம் அந்தப் பணியிலே மேலும் தீவிரம் காட்டிட வேண்டும் என்று என்மனம் நினைக்கும்போது மகிழ்கிறேன்.

இயக்கப்பணிதான் இன்ப மூட்டுபவை! அந்த இன்பத்தைத் தொடர்ந்துபெற்றிட உழைப்பேன் என உறுதி கூறுகிறேன்.

ஜி சுப்பிரமணியன்
நெய்வேலி - 2

★★★★0★★★

நம் நாடு

சந்தா விவரம்

ஓராண்டு சந்தா ரூ. 26-00

ஆறுமாத சந்தா ரூ. 13-00

ஆறு மாதங்களுக்குக் குறைந்த சந்தா ஏற்றுக் கொள்ளப்படமாட்டாது.

★★★0★★★★



காதலி கடிதம்

கருணாநிதி

எந்த இடத்தில் நாங்களிருக்கிறோம் என்றே சொல்ல முடியாது. எந்த நேரத்தில் எங்களது முகாம் வேறிடத்துக்கு மாற்றப்படும் என்றும் கூற முடியாது. எப்போது நாங்கள் சாவோம். அல்லது சாவிலிருந்து மீள்வோம் என்றும் கூற முடியாது

எதிரிகளின் தாக்குதல் எத்தன்மைத்தாயிருக்கும் என்றும் நிச்சயிக்க முடியாது. வெறிபிடித்த இட்லர்-முசோலினியின் பக்கந்தான் வெற்றி மழை பொழிகிறது என்ற செய்திகள் நிமிஷத்துக்கு நிமிஷம் காதிலே விழுந்து கொண்டிருக்கின்றன.

கடலிலே சென்றால் கண்ணி வைத்துப் பிடிக்கின்றனர். பறந்தால் சுட்டு வீழ்த்துகின்றனர்; நடந்தால் சுற்றிலும் நாசம் படையெடுத்து வருகிறது. இப்படிப்பட்ட சூழ்நிலை — கூடாரத்தை விட்டு வெளியிலே சென்றால் தலையிலே செடிகொடிகளை வைத்துக் கட்டிக்கொண்டு நடக்க வேண்டும் — இல்லை இல்லை; நகர வேண்டும், அப்போது தான் எதிரியின் விமானத்தை ஏமாற்ற முடியும் ஏதோ மரஞ்செடி. கொடி அசைகிறது என்று பகைவர்கள் போய் விடுவார்கள்.

மனிதன்; இராணுவத் தொப்பி அணிந்த நேசதேசப் படையைச்சேர்ந்தவன்என்று தெரிந்தால் போதும்; விமானத்திலிருந்து குண்டு பொழியும். சிதறிப்போய்விடவேண்டும் தூள் தூளாக! இது போன்ற பயங்கரம் நிறைந்த விநாடிக்கு விநாடி மரணத்தோடு போராட்டம் நடத்திய அந்தச் சமயத்திலேகூட நான் அவளுக்குக் கடிதம் எழுதத் தவறவில்லை பட்டாள முகாமிலே பயிற்சி பெற்ற நேரம் போக, மிச்சமுள்ள நேரமெல்லாம் என் காதலிக்கு ஓலை எழுதுவதிலேயே உற்சாகமாகக் கழிந்தது.

அன்று கடிதம் எழுதிக் கொண்டிருந்தேன். என் நண்பன் பாலன் அதைப் பின்னாலிருந்து கவனித்துக் கொண்டிருந்ததைக்கூட நான் பார்க்கவில்லை. பாலன், தமிழ்நாட்டிலே தஞ்சை மாவட்டத்திலிருந்து பட்டாளத்திற்கு வந்தவன். என்னோடு நெருங்கிப் பழகிய நண்பன். சொல்லப் போனால், எனக்குத் தமிழ் கற்றுக் கொடுத்த ஆசிரியர் கூட அவன்தான். என்னிடம் அவன் இந்தி கற்றுக்கொண்டான். ஒருவருக்கொருவர் உபாத்தியாயர்களாக மட்டுமில்லாமல் உழுவலன்பு பூண்ட தோழர்களாகவும் இருந்தோம். கடிதத்தை எழுதித் தபாலில் போட்டுவிட்டு வந்தேன். பாலன் என்னைப் பரிகாசமாகப் பார்த்தான். "என்ன பாலா?" என்றேன். பாலன் ஆரம்பித்து விட்டான்:

"அன்புள்ள கண்மணி சுதேஷுக்கு சுந்தர்பாபுவின் ஆசை முத்தங்கள். அல்லும் பகலும் அனவரதமும் உன் அழகு முகத்தை எண்ணியெண்ணி ஏங்கிக் கொண்டிருக்கிறேன். எதிரி விமானங்கள் வட்டமிடும்போதும், எங்கள் பாசறையை நோக்கி ஆபத்து வருகிறது என்று அபாயச் சங்கு ஒலிக்கிறபோதும் இடியோசை கேட்டு "அர்ச்சுனா — அர்ச்சுனா" என்று அலறுவார்களே! அதுபோல நானும் பகையோசை கேட்டு, "சுதேஷ் — சுதேஷ்" என்று முணுமுணுக்கிறேன். அந்தக் காதல் மந்திரம்தான் கண்ணே, எனக்கு ஆறுதல் வழங்கும் அமுதமாக இருக்கிறது. எப்போது இந்தப் பொல்லாத போர் முடியுமோ; பொன்னழகே! உன்னை ஓடிவந்து அணைப்பேனோ தெரியவில்லை சுதேஷ்!

நினைத்தோறும் நான் உனக்குக் கடிதம் எழுதுகிறேன்! நீ பதிலுக்கு ஏன் நாள்தோறும் கடிதம் எழுதக் கூடாது? தெவிட்டிவிடும் என்று கருதுகிறாயோ? என் தேனே. முன்பெலாம் தினம் ஒரு மடல் எழுதினாய்; 'தினம் கடிதம் எழுதுங்கள்' என்று எனக்கு மட்டும் கட்டளையிட்டாய். உன் கட்டளையை சிரமேற்கொண்டு நான் ழுதக் கொண்டிருக்கிறேன். நீமட்டும் ஏன் திடீரென்று ஒருமாத காலமாக மௌனம் சாதித்துவிட்டாயோ தெரியவில்லையே — சுதேஷ் — சுருண்டு போகிறேன் நான்! கனவிலும் உன்னைக் கண்டு கலங்குகிறேன். சதா என் இருதய பீடத்திலே அமர்ந்து என் பூசைக்குரிய பொன்விக்கிரகமாக அமைந்திருக்கும் உனக்கு என் மீது என்னம்மா கோபம்? என் உயிரே! இதற்காவது பதில் எழுதி எனக்கு உயிர்ப்பிச்சை கொடு! விரைவில் திரும்பி வந்து விவாகம் செய்து கொள்ளவில்லை என்ற ஒரு தவறைத் தவிர நான் வேறென்ன தவறுசெய்தேன்? விரைவில் வெற்றி வீரனாக வருகிறேன்!

பதில் — பதில்.

அன்புக்கு அடிமை,

சுந்தர்பாபு

— நான் அவளுக்கு எழுதிய கடிதத்தை அப்படியே மனப்பாடம் செய்து ஒப்புவித்தான் பாலன். அப்போதுதான் தெரிந்தது அவன் என் பின்னால் மறைந்திருந்து கடிதம் முழுவதையும் படித்திருக்கிறான் என்று!

காதல் விவகாரங்களில் ஈடுபடும் போதாகட்டும்; காதல் கடிதம் எழுதும் போதாகட்டும்; காதலியின்பால் கண்ணை வீசும்போதாகட்டும் பக்கத்தில் யார் இருந்து நம்மைக் கவனிக்கிறார்களோ என்ற பயமே மனிதனுக்கு ஏற்படுவது கிடையாதே! சும்மாவா சொன்னார்கள், காதலுக்குக் கண்ணில்லை என்று! அது என் விஷயத்தில் உண்மையாகத்தான் முடிந்து விட்டது. என்னையறியாமல் பாலன் கடிதத்தைப் படித்தது மட்டுமல்ல நான் குறிப்பிடுவது; என் காதல் மாளிகையின் அஸ்திவாரமே குருட்டுக் கொத்தனாரால் அமைக்கப்பட்ட போலி அஸ்திவாரமாகத்தான் முடிந்துவிட்டது! அப்பொழுதே சொன்னான் பாலன், அடிக்கடி கடிதம் எழுதாதே கசந்துவிடும் என்று கைவலிக்க வலிக்க எழுதினேன். கருத்து இனிக்கப் படிப்பாள் என்று நம்பினேன். ஆனால் நம்பிக்கை நாசமாயிற்று. உலகத்தை நிலை கலக்கிய போர் முடிந்துவிட்டது - ஆனால் என் உள்ளத்தை நிலை கலக்கிய போர் முடிவடையவில்லை

ஆயிரம் மடல். அதற்குப் பதில் எழுதவில்லை. பாலன் சொன்ன சமாதானங்கள் எதுவும் என் காதில் ஏறவில்லை

"யுத்தச் செய்திகள் யாருக்கப்பா சரியாகக் கிடைக்கிறது? எங்கேயோ ஒரு மூலையில் இந்தியாவிலே குடியிருக்கும் உன் காதலியின் குடும்பத்தார் யுத்த வெறியினால் எப்படி பாதிக்கப்பட்டார்களோ; யார் கண்டது? சுதேஷாவின் மீது வீணாக ஆத்திரப்படாதே! நேரில் சென்று உண்மை நிலையை அறியணும்" என்று பாலன் அடிக்கடி கூறினான்.

அவனது ஆறுதலால் உயிர் வாழ்ந்தேன். அவன் கூறியது உண்மைதான் என்பது போல அவளுக்கு நான் கடைசியாக எழுதிய கடிதங்கள் எல்லாம் எனக்கே திரும்பி வர ஆரம்பித்தன, யுத்தத்தினால் என் அன்புக்கரசியும், அவளது குடும்பத்தினரும் பாதிக்கப்பட்டு விட்டனர் என்பதை நம்பினேன். சுதேஷாவின் அன்பையும் காதலையும் சாதாரணமாக எடை போட்டுவிட்டோமே என்று எனக்குள்ளாகவே வருந்தினேன்,

போர் முடிந்தது. எங்களையெல்லாம் மகிழ்ச்சியோடு ஊருக்கு அனுப்பினார்கள், நண்பன் பாலனையும் அழைத்துக்கொண்டு சுதேஷாவைப் பற்றிய விவரமறியப் புறப்பட்டேன். சுதேஷாவின் வீடு பூட்டப்பட்டுக் கிடந்தது. பக்கத்திலே விசாரித்தேன். அவர்கள் சொன்னார்கள் — அவளுக்குக் கல்யாணமாகி விட்டதென்று!

என் மனம் சூன்யமாகி விட்டது! மயக்கம் வரும் போலிருந்தது! அவ்வளவுதான்; கீழே சாய்ந்து விட்டேன்! மயக்கம் தெளிந்து எழுந்தேன். பக்கத்திலே பாலன் இருந்தான்; அவனைக் கேட்டேன்.

"சுதேஷாவின் கணவன் யார் என்று யாரிடமாவது விசாரித்தாயா?" என்று.

"விசாரித்து விவரமறிந்தேன் சுந்தர்! சுதேஷாவிற்குக் கணவனை தேடிக்கொடுத்ததே நீதானே!" என்றான் பாலன்,

"நானா?"

"நீ இல்லை — நீ எழுதிய கடிதங்கள்!"

"கடிதங்களா...?"

"ஆமாம் — தினம் ஒரு கடிதம் எழுதும்படி சுதேஷா உனக்கு எழுதினாள் அல்லவா...?"

"ஆமாம்"

"அது ஏன் தெரியுமா?

"ஏன்?"

"கடிதம் கொண்டு வருகிற அந்த தபால்காரனின் அழகை ரசிக்கத்தான்."

"என்ன?

"ஆமாம் — சுந்தர் அக்கம் பக்கத்தார் கூறிய உண்மை இது! தினந்தோறும் அந்த அழகும் வாலிபமும் இணைந்த தபால்காரனைச் சந்தித்த சுதேஷா தன் நிலை மறந்தாள்; நீ அடிக்கடி கூறுவாயே இந்துப் பெண்ணின் தர்ம நெறியைப் பற்றி; அந்த நெறியிலிருந்தும் விழுந்தாள்; அவ்வளவுதான். தபால்காரனுக்கும் சுதேஷாவுக்கும் கல்யாணம் முடிந்து விட்டது!"

பாலன் அந்தச் செய்தியைக் கூறியபிறகு உலகப் போர் இன்னும் முடியவில்லை என்றே எனக்குத் தோன்றியது; தோன்றுகிறது. பாலன் என்னோடு இரண்டு நாள் தங்கியிருந்தான். அவனும் போய்விட்டான். அவனை 'அத்தை மகள்' அவசர அழைப்பு அனுப்பினாள் என்று. நான் என்ன செய்வேன்?

என் கடிதத்தைச் சுமந்து வந்தவன் பெற்ற பாக்கியம் கூடக் கடிதம் எழுதிய நான் பெற முடியவில்லையே! அதிகமாகக் கடிதம் எழுதுவதிலும் இப்படி ஒரு ஆபத்து இருக்கிறது என்று எனக்குத் தெரியாமல் போய்விட்டதே!

அப்போதே அந்த ஜெர்மனியரின் குண்டுகள் என் தலையில் விழுந்திருக்கக் கூடாதா?



அண்ணா அறக்கட்டளை அப்பழுக்கற்றது!

சமரசம்: அண்ணா அவர்கள் காலத்தில் 'அன்பகம்' இருந்தது; 'அறிவகம்' இருந்தது. பிறகு அறிவாலயம் ஏற்பட்டது. அண்ணா அறக்கட்டளை என்று ஏற்படுத்தப்பட்டு. அதன் சார்பில் 18 லட்ச ரூபாய் இருப்பதாக அறிகிறேன்,

பேராசிரியர்: அந்தப் பணம் எல்லாம் ஜாக்கிரதையாக வங்கியில் இருக்கிறது. வேண்டுமானால் உறுப்பினர் சமரசம் பார்த்துக்கொள்ளலாம். கட்சியில் பணம் இருக்கிறதா இல்லையா என்பது இந்த அவையில் விவாதிக்க வேண்டிய பிரச்சினை அல்ல

சமரசம்: அண்ணா அறக்கட்டளையில் 18 லட்ச ரூபாய் இருப்பதாக அறிகிறேன். அது உருவானதன் நோக்கம் என்ன? மாணவர்களுக்காக, தொழிலாளர்களுக்காக, ஏழைகளுக்காக ..

கலைஞர்: இந்தப் பிரச்சினையை நண்பர் சமரசம் பேசவிருக்கிறார் என்று முன்கூட்டி தெரிந்தே, அதற்கான விவரங்களை நான் கொண்டு வந்திருக்கிறேன். எனவே போலீஸ் இலாகா எங்களிடமும் இருக்கிறது என்பதை முதல்வர் தெரிந்து கொள்ளலாம். (சிரிப்பு) இது போலீஸ் இலாக்காவிலிருந்து தெரிந்தது அல்ல. முகக் குறிப்பிலிருந்து தெரிந்துகொண்டேன். நேற்றைக்கே அரசாங்கக்கொறடாவிடம் இன்று இதுபற்றி ஆளும் கட்சியினர் பேசுவார்கள் எனச் சொல்லி விட்டேன், இதுபற்றிய கணக்கைச் சொல்லி விடுகிறேன்.

இது ஒன்றும் கருணாநிதி அறக்கட்டளை அல்ல தி. மு. கழக அறக்கட்டளை. நம்முடைய முதலமைச்சர் அவர்கள் அன்று கழகத்தின் பொருளாளராக இருந்தபோது கழகத்தின் செயற்குழுவில் நிறைவேற்றப்பட்ட தீர்மானத்திற்கிணங்க, பொருளாளர் கையெழுத்திட்டு முதலில் ஐந்து லட்சமும், மறுபடியும் ஒன்றரை லட்சமும் ஆக ஆறரை லட்சமும், தலைமைக் கழகத்தின் நிதியாகவும், மதுரை மாவட்டக் கழக மாநாடு நடத்திய தொகையிலிருந்து மூன்று இலட்சமும், தஞ்சை மாவட்ட மாநாடு நடத்திய தொகையிலிருந்து ஒரு லட்சம் அறக்கட்டளைக்கான நன்கொடையாக ரூ 47 477—16-ம் ஒரு ரூபாய் நன்கொடைச் சீட்டுக்கள்மூலம் 13 06 361 ரூபாயும், இந்தியன் வங்கியில் பிக்செட் டெபாசிட் மூலம் வட்டி வரவாக 82 183-31-ம் அங்கே பெட்ரோல் பங்க் வாடகை வரவு மூலம் ரூ. 36 650ம். ஆகமொத்தம் 25,22 672 ரூபாய்வரவுவந்தது செலவு விவரம்: அறக்கட்டளைத் திடல் கொள் முதல் ஒன்பது லட்சம் சொத்து பத்திர பதிவு செலவு ரூ 91 085; நன்கொடைச்சீட்டு அச்சு செலவு ரூ 29 160 - 86; அறக்கட்டளைக்கான திடல் சீர்திருத்தம் முதலியன ரூ. 26,963 — 27; நகர்ப்புற நிலவரிபாக்கி செலுத்தியது ரூ 60 123-62; மாநகராட்சிவரி பாக்கி செலுத்தியது ரூ. 6 079 - 37; வழக்குச் செலவு ரூ 8,505; காவல்காரர் சம்பளம் ரூ. 6515. அறக்கட்டளை சார்பான நிதி உதவி — விழுப்புரம் கலவர நிவாரணம் ரூ 25000 இலங்கை புயல் நிவாரணம் ரூ 10 000; சென்னை வெள்ள நிவாரணம் ரூ. 5 000: ஆகமொத்தச்செலவு ரூ, 11 68 532 - 62 இதுபோக இந்தியன் வங்கியில் பிக்சட் டெபாசிட்டில் இருப்பது ரூ 13,32,183-31 ஆகும் அது மாத்திரம் அல்ல. உங்களுக்குச் சொல்லிக் கொடுத்தவர், கூட்டங்களில் கூடப்பேசிக்கொண்டிருக்கிறார் என்ன பேசிக் கொண்டிருக்கிறார் என்றால் கருணாநிதி மறைவுக்குப் பின்னால் அது அவருடைய மகனுக்குச் சேர்ந்துவிடும். ஏனென்றால் கருணாநிதிதான் மானேஜிங் டிரஸ்டியாக இருக்கிறார் என்று கூட்டங்களில் பேசிக் கொண்டிருக்கிறார் உண்மை அதுவல்ல. என்னுடைய மறைவிற்குப் பிறகு. அதிலே என்ன இருக்கிறதென்றால், அதை அப்படியே படிக்கிறேன்

அதாவது நான் இறந்துபோன பிறகுகூடமீதமிருக்கிற டிரஸ்டிகள்—நாவலர் நெடுஞ்செழியன் டிரஸ்டியாக இருக்கிறார். பேராசிரியர் அன்பழகன் அதில் டிரஸ்டியாக இருக்கிறார்; மன்னை நாராயணசாமி இருக்கிறார்; நீலநாராயணன் இருக்கிறார்; எனவே நான் மறைந்தபிறகு என்னுடைய குடும்ப வாரிசுகளுக்கு இது வந்துவிட முடியாது. இதிலே டிரஸ்டிகளாக உள்ளவர்கள்தான் அவர்களில் ஒருவரைத் தேர்ந்தெடுத்துக்கொள்ள வேண்டும்.

சட்டமன்ற நிகழ்ச்சி

21 2—79

★ 'சிம்கோ'வில் செங்குருதி! ★

சிம்கோ மீட்டர்ஸ் தொழிற்சாலை கடந்த பதினைந்து ஆண்டுக்காலமாகதிருச்சியில் இயங்கி வருகிறது

தொழிலாளர்களின் கோரிக்கைகளை நிறைவேற்ற அனைத்துக்கட்சிகளும் வேண்டுகோள் விடுத்து, கட்டுப்பாடான வேலை நிறுத்தம் நடைபெற்று வருகிறது.

கோரிக்கைகளின் பக்கம் நிர்வாகம் செவி சாய்க்கவில்லை மொத்தம் 1400 தொழிலாளர்கள் பணியாற்றும் இத்தொழிற்சாலையில் ஊழியர்களும் தொழிலாளர்களும் நான்கு ரூபாய் ஐம்பது காசு பெற்றுவரும் அன்றாடக் கூலிகளாக வேலை வாங்கப்பட்டு வருகின்றனர்.

கடந்த மூன்று மாதங்களுக்கும் மேலாக உரிமைக்குப் போராடி வரும் தொழிலாளர்களை நிர்வாகம் பழிவாங்கும் நடவடிக்கைகளில் ஈடுபட்டிருக்கிறது. இத்தனைக்கும் மேலாக போராட்டம் வலுப்பெற்று பதட்ட நிலையினை உருவாக்கியுள்ளது. தி. மு. கழகத்தின் திருச்சிநகரச் செயலாளர் ஏ வி. கிருஷ்ணமூர்த்தி மார்க்சிஸ்ட் கட்சியைச் சேர்ந்த தலைவி ஜானகி இராமச்சந்திரன் உட்பட 100 பெண்கள் உண்ணாவிரதமிருந்த மார்க்ஸிஸ்ட் தலைவர் ரங்கராசன், அனந்த நம்பியார், இராசகோபால் (வ.க) வேலுசாமி (ஜனதா) இராகவானந்தம், மகமதலி. ஜனதா மாதர் அணி தனபாக்கியம், ஜெயலட்சுமி. தி. மு. க.வைச் சேர்ந்த குஞ்சிதபாதம் காமராஜ் காங்கிரஸ் தேவராஜ், அரசு மணி, அரசு ஆயிரக்கணக்கான மாணவர்கள். தொழிலாளர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர்

இந்த வேலை நிறுத்தப் போராட்டத்திற்கு ஆதரவு தெரிவிக்கும் வகையில் திருச்சி நகரிலுள்ள வியாபாரிகள் அனைவரும் ஒத்துழைத்துக் கடையடைப்பு நடத்தினர். பல்வேறு வியாபார சங்கங்கள் ஆதரவு தந்துள்ளன.

உரிமைக்காகப் போராடி வரும் தொழிலாளர்களை நிர்வாகம்குண்டர்களைக்கொண்டு வந்து இறக்கி மூர்க்கத்தனமாகத் தாக்கியுள்ளது.

கூலிக்குப் பிடித்து குண்டர்கள் கார் மூலமாகக் கொண்டு வரப்பட்டபோது கடமையுணர்வோடு தடுத்து நிறுத்திய மாவட்டக்காவல் துறை துணை அதிகாரியை உடனடியாக மாற்றம் செய்துவிட்டது இன்றைய 'தொழிலாளி'' புகழ் சினிமா அரசு! காவல்துறையினரின் கண்முன்னாலேயே தொழிலாளர்கள் தாக்கப்பட்ட வேதனை நடந்திருக்கிறது

ஆளுங்கட்சிக் குண்டர்களின் மிரட்டல் நாடகங்கள்,

காவல்துறையினரின் தடியடி தர்பார்கள்,

எதிர்க்கட்சியினர் மீது ஏவிவிடப்பட்ட அடக்குமுறைக் கொடுமைகள்:

மண்டைகள் உடைபட்ட இரத்தம் கொட்டிய தொழிலாளர்களின் பரிதாபநிலை,

—இவை அராஜக ஆட்சியின் பரிசுகளாகப் படைக்கப்பட்டுள்ளன

அராஜகத்திற்கு முடிசூட்டியதைப்போல் காவல்துறையினர் டி. ஐ. ஜி. தேவாரத்தின் மேற்பார்வையின் கீழ் வழக்கமான பழக்கப்படி மிருகத்தனமான வெறித்தாக்குதல்களை நடத்தியுள்ளனர். நகரின் பல்வேறு பகுதிகளில் காவல்துறையினரின் தடிகள் விளையாடியிருக்கின்றன.

திருச்சித் தொழிலாளர்கள் இப்பேர்ப்பட்ட கொடுமை என்றும் சந்தித்ததில்லை.

செந்தமிழ்காக்க தீரர்கள் கூடிய திருச்சியில் இப்போது செங்குருதி மகாட்டித் தொழிலாளர்கள் சிவப்புக் காவியம் எழுதியுள்ளனர். தொழிலாளர் வாழ்வுக்கு விடிவு ஏற்படுகிறதா? அல்லது இந்த அலங்கோல ஆட்சிக்கு முடிவு ஏற்படுகிறதா? என்று பொறுத்திருந்து பார்ப்போம்!

லெனின்

தெனாலிராமன் சித்திரம்!

தமிழகச் சட்ட மன்றத்தில் இம்முறை ஒரு தெனாலிராமன் கதை உருவாகியிருக்கிறது

தெனாலிராமன் எழுதிய சித்திரம் பற்றிய கதை உங்களுக்குத் தெரியும்

மன்னன் கூப்பிட்டு உனக்குச்சித்திரம் எழுதத்தெரியுமா? என்று கேட்டான். தெரியும் என்றான் தெனாலிராமன். அப்படியென்றால் எழுது என்றான் மன்னன். அதற்கு ஒரு மாளிகை தரச் சொன்னான் சித்திர வேலைப்பாடு முடிந்ததும் மன்னன் தெனாலிராமனை அழைத்துக் கொண்டு போனான்–சுவரைப் பார்த்தான். அழகான கண்மட்டும் இருந்தது. இதென்ன கண் இருக்கிறதே. மூக்கு எங்கே என்று கேட்டான். இதோ பாருங்கள் என்று அழைத்துக் கொண்டு போய் இன்னொரு பக்கத்திலே காட்டினான். மூக்கு மட்டும் இருந்தது. கண் வரையிலே அழகாகத்தான் இருந்தது மூக்கு வரையிலே அதுவும் அழகாகத்தான் இருந்தது. இன்னொரு பக்கத்திலே தோள் இருந்தது, இன்னொரு பக்கத்திலே தாள் இருந்தது. வேறொரு பக்கத்தில் சில உறுப்புச்கள் அழகாக எழுதப்பட்டிருந்தன. அவை ஒன்று சேர்க்கப்படவில்லை.–ஏன் என்று கேட்டதற்குத் தெனாலிராமன் சொன்னான். நான் அந்தந்த உறுப்புகளை எவ்வளவு அழகாக எழுதுகிறேன் என்பது மொத்தமாக எழுதினால் கண்டு பிடிக்க முடியாதல்லவா? இதோ கண்ணைப் பாருங்கள். அழகாக இருக்கிறதல்லவா? எனக்குக் கண் நன்றாக எழுதத் தெரியும். இதோ மூக்கு நன்றாக எழுதத் தெரியும் அல்லவா என்று எடுத்துச் சொன்னான். இப்படி ஒரு பட்டிக்காட்டுக் கதைசொல்வார்கள்.

இந்தக் கதை இப்போது பட்டணத்திலே நடைபெற்றிருக்கிறது. அதுவும் செயிண்ட் ஜார்ஜ் கோட்டையிலே காட்சியாகக் கிடைத்திருக்கிறது.

எதிர்க் கட்சிகளின் கடுமையான விமர்சனத்திற்கு உட்பட்ட உப்புச் சப்பற்ற–அ.தி மு க. அரசின் திட்டங்களை 'கவர்னர் உரை' என்பதன் பெயரால் சட்டமன்றம் வேடிக்கை உருவமாகப் பெற்றிருக்கிறது.

சட்டமன்றத் தெனாலிராமனின் இந்த சித்திரத்தின் மாட்சியை இனி பட்டி தொட்டிகளெல்லாம் சட்டமன்றத் தொடர்க் கூட்டம் நடந்து முடிவதற்குள் அறிந்து கொள்வதற்கு ஆவன செய்வதில் அதிகக் கஷ்டமில்லை.

அ ரவிவர்மா.

சிந்தனை சதுக்கம்

சோம்பேறி அலுத்துக் கொண்டான் —
'சே' இந்தச் சமூகமே சுத்த மோசம்!;
என்னை வஞ்சித்து விட்டது!'

●

அவனுக்குக் கனவு வந்தது.

கனவில் அவன் அரசனவதாகவும் உலகமெல்லாம் துச்சமாக இருப்பதாகவும் தெரிந்தது.

பின்பு விழிப்பு வந்தது.

பையில், ஒரு ரூபாய் நோட்டைப் பத்திரமாகத் தடவிப்பார்த்துக் கொண்டான்.

அவன் குடித்துக் கொண்டேயிருந்தான்; அத்தோடு ஆயுளையும் குறைத்துக்கொண்டேயிருந்தான்.

●

குயிலின் கீதம் இனியது என்றான் அவன்;
குயில் கறி ருசியானது என்றான் இவன்!

●

அணைக்கப்பட்டவன் அடங்கிவிடுகிறான்.
அமுக்கப்பட்டவன் ஆர்த்தெழுகிறான்;
புறக்கணிக்கப்பட்டவன்தானே போர்முரசு கொட்டமுடியும்!

●

உலகம் கூவியழைத்தது; இவன் குறட்டைவிட்டான். விழிப்பு வந்தபோது உலகத்தைத் தட்டியழைத்தான்–அது குறட்டைவிட்டது.

●

வேதாந்தி விதியை வீசினான் — அடிமைகள் ஊமையானார்கள். விஞ்ஞானி ஒளியைப் பிளந்தான் — அடிமைகள் விழித்துக்கொண்டார்கள்!

—அன்புநிதி

இருமொழித்திட்டமே இன்றைய தேவை

கொழும்பு விமான நிலையத்தில் இந்தியப் பிரதமர் மொரார்ஜி தேசாய் அவர்களின் ஆங்கிலப் பேச்சை இலங்கை அதிபர் ஜெயவர்த்தனே சிங்களத்தில் மொழி பெயர்த்துக் கூறினார்.

''ஆங்கிலம் அவசியந்தானா?'' இது இன்றைய கேள்வி,

'நிச்சயமாக ஆம்'—பதில் இது இதை மொரார்ஜி தேசாய் சொல் அளவில் இன்றி ஆங்கிலத்தில் ஆற்றிய உரையின் மூலமாக செயல் அளவில் உறுதிப்படுத்துகிறார்.

ஆங்கிலமொழியைக் கொண்டு உலகையே வெற்றிகரமாக மொரார்ஜி தேசாய் சுற்றி வரலாம், இந்தி மொழியைக் கொண்டு வெற்றி உலா வர முடியாது—இது உண்மை.

மொரார்ஜி ஆங்கிலத்தில் பேசுவதால் அவர் தேசப் பற்றில்லாதவர் என்று சொல்லிவிட முடியாது.

மொழி என்பது தேசப் பற்றின் அடையாளம். அல்ல.

நமது நாட்டுக்கு விடுதலை பெற்று தரும் அளவிற்கு ஆங்கில மொழி பயன்பட்டுள்ளது.

ஆங்கில மொழியை அப்புறப்படுத்தினால் இந்தியா தனது மதிப்பை உலக அரங்கில் இழந்து விடும்.

நமது நாட்டில் கற்றவர் தொகையில் எண்பது சத விகிதத்திற்கு மேலாக ஆங்கிலம் அறிந்தவர்களாக இருக்கிறார்கள்.

பதினான்கு தேசிய மொழிகளையும் இணைப்பு மொழிகளாகவும், ஆட்சி மொழிகளாகவும் ஆக்குவது எ பது முடியாததாகும்.

மும்மொழித் திட்டத்தைச் செயல்படுத்தினால் இந்தி பேசும் மாநிலங்களுக்கு மட்டுமே அனுகூலமாக முடியும்.

இந்தி பேசாத மாநிலத்தைச் சேர்ந்த பள்ளி மாணவர்களுக்கும் மக்களுக்கும் இத்திட்டம் பெரும் சுமையாகவே இருக்கும்.

இன்னமும் வேலையில்லாத் திண்டாட்டம், பசிக் கொடுமை, உடுக்க உடை இருக்க இடம் ஆகிய அடிப்படைப் பிரச்சினைகளைத் தீர்க்க வேண்டிய நிலையில் நாம் இருக்கும்பொழுது மொழிப் பிரச்சினையை இந்த நேரத்தில் முன்னிலைப் படுத்த வேண்டிய அவசியம் என்ன?

மொழிப் பிரச்சினையைத் தீர்க்கும் ஒரே வழி மாநில மொழியுடன் ஆங்கிலம் இணைந்த இருமொழித் திட்டம் ஒன்றுதான்!

ஆங்கிலம் பொது மொழியாகும்; அதுவே நாட்டின் ஒற்றுமையைப் பலப்படுத்தும்.

பள்ளியிலும் கல்லூரியிலும் ஆங்கிலத்துக்கும், தமிழுக்கும் சம வாய்ப்பு அளிக்கும் இருமொழித் திட்டத்தைச் செயலாக்குவதில் தமிழக அரசு தனது நிலையை மேலும்உறுதிப்படுத்த வேண்டும்.

(சென்னை 'மெயில்' ஆங்கில நாளேட்டில் ஆசிரியருக்குக் கடிதப பகுதியில் ஜி. டேனியல் என்பார் எழுதியுள்ள கடிதத்தின் மொழி பெயர்ப்பே மேலே தரப்பட்டுள்ளது.)

பெரியார்-அண்ணு எழுத்துக்களால்

கவரப்பட்ட மேற்கு ஜெர்மனி பெண்மணி

தமிழினவரலாற்றை ஆராய தமிழகம் வந்துள்ளார்!

திருமதி, டாக்மர் ஹெல்மனின் தாயகம் மேற்கு ஜெர்மனி ஆகும். 'ஹெம்பர்க்' பல்கலைக் கழகத்திலும், பின்னர் 'ஹீடல்பர்க்' கிலிருக்கும் 'சௌத் ஆசியன் இன்ஸ்டியூட்டி' லும் பயின்ற இவர் இப்போது 'Ph. D' ஆய்வுப் பட்டப்படிப்பிற்காக இந்தியா வந்துள்ளார்.

மேற்கு ஜெர்மன் அரசின் உதவித் தொகை பெற்று, தமிழ்மொழி குறித்தும், தமிழ் இலக்கியங்கள் குறித்தும் ஆய்வு செய்துவரும் இவர். கடந்த ஒரு மாதகாலமாக சென்னையில் தங்கியிருந்து, தமது ஆய்வுப் பணியில் மும்முரமாக ஈடுபட்டு வருகிருர்.

சுயமரியாதை இயக்கம் — திராவிடர் கழகம் — திராவிட முன்னேற்றக் கழகம் போன்ற திராவிட இயக்கங்கள்பற்றிக் குறிப்பாகவும் சிறப்பாகவும் இவர் ஆய்வு செய்து வருகிருர். இந்த இயக்கங்களின் கொள்கைகளையும் செயல் திட்டங்களையும் விரிவாக ஆராய்ந்து வருகிருர்

தமிழ்மொழி மீதும், திராவிட இடக்கங்கள் மீதும் இவருக்கு ஆர்வம்ஏற்படக்காரணமாக இருந்தவர் இவருடைய ஆசிரியையான டாக்டர். ஹெல்கா ஆண்டன். இவருக்கு இத்துறைகள் குறித்து துவக்கத்திலேயே விரிவான பாடங்கள் நிகழ்த்தியவர் டாக்டர் ஹெல்கா. பெரியார், அறிஞர் அண்ணு போன்ற மேதைகளின் எழுத்துக்களைத்தனக்கு அறிமுகம் செய்து, அவைகளின் மீது தனக்கு ஈடுபாடு ஏற்படச் செய்தவரும் தன்னுடைய ஆசிரியையே என்று இவர் பெருமிதத்துடன் கூறுகிருர்.

"இந்திய மொழிகள் பலவற்றைக் கற்றுக் கொள்ள நான் துவங்கினேன். என் ஆய்வுப் படிப்பைத் தொடர்ந்து, தமிழ்மொழி மீதும், தமிழர் நாகரிகம்—பண்பாடு - கலாச்சாரம் மீதும் எனக்கேற்பட்ட ஆர்வமும்விருப்பமும் நாளுக்கு நாள் வளர்ந்து வருகிறது' என்கிருர் டாக்மர் ஹெல்மன்.

தென்னுட்டின் பண்பாட்டுக் கோலங்கள் வட இந்திய மாநிலங்களின் பண்பாட்டிலிருந்து முற்றிலும்மாறுபட்டும், தனிச்சிறப்புகளுடனும்திகழ்வதாகக் கூறும் இவர், இந்த வேற்றுமைகளை ஆர்வமுடன் ஆய்ந்து வருவதாகக் கூறுகிருர்.

பழந்தமிழ் இலக்கியங்களை — குறிப்பாக சங்க இலக்கியங்களை பயிலத் துவங்கி இருக்கும் இவர் இவைகளின் மீது கொண்ட ஆர்வத்தாலும் — இவைகள் குறித்து விரிவாக ஆய்வு செய்ய வேண்டும்என்பதற்காகவும் — சென்னைப் பல்கலைக் கழகத்தில் பயின்றும் வருகிருர்

"பழந்தமிழ் இலக்கியங்கள் மீது எவ்வளவு ஆர்வம் கொண்டுள்ளேனே அந்த அளவுக்கு தற்காலத் தமிழ் இலக்கியங்கள் மீதும் ஆர்வம் கொண்டுள்ளேன். இவைகள் குறித்தும் விரிவாக ஆய்ந்து வருகிறேன் என்று கூறுகிருர் இவர்.

பழைய பண்பாடுகளும் கலாச்சாரங்களும், வாழ்க்கை முறைகளும் நவீனகால சிந்தனைகளினுலும், மேற்கத்திய பாணி வாழ்க்கை முறைகளினுலும் தாக்கப்பட்டுப் பொதுவாக மாறுதலடைவது கண்கூடாகக் காணும் உண்மை. அனுல் தமிழகம் புதியசிந்தனைகளையும் முற்போக்குஎண்ணங்களையும் ஏற்றுக்கொண்டு காலத்தோடு ஒத்துழைத்தபோதும் அதுதனது பண்பாட்டையும், கலாச்சாரத்தையும் இழந்துவிடவில்லை என்கிருர் இவர்.

'இந்தியாவிலேயே இந்தத் தனிச் சிறப்பு தமிழகத்தில் மட்டுமே இருப்பதைநான் காண்கிறேன்" என்கிருர்.

அதுமட்டுமல்ல—

பிற கலாச்சாரங்களின் ஆக்கிரமிப்பைத் தடுத்து, தனது பண்பாட்டுக் கோலம் கலையாது பாதுகாத்து வரும் பெருமை தமிழகத்திற்கு உண்டு என்கிருர்.

"திராவிட முன்னேற்றக் கழகம் குறித்து விரிவாக அறியும் எண்ணம் தங்களுக்கு ஏற்படக் காரணம் என்ன?" என்று கேட்டபோது, 'பளிச்' சென இவர் பதில் சொன்னுர்:

'இந்த இயக்கம் அறிஞர் அண்ணுவால் தோற்றுவிக்கப்பட்ட தமிழர்களின் இடக்கம், ஆகவேதான் ஆர்வம் ஏட்பட்டது"

தமிழ்மொழி — இலக்கியங்கள் குறித்து அறிஞர் அண்ணு பேசியவைகளையும், எழுதியவைகளையும் ஆராய்வதும், இவர் மேற்படிப்பின் ஒரு பகுதி.

அறிஞர் அண்ணு பற்றி இவர் குறிப்பிடுகையில், **'அவருடைய விரிந்த அறிவும் பரந்த உள்ளமும் தனித்த நோக்கங்களும் திராவிட முன்னேற்றக் கழகத்தை வளர்க்க மிகவும் உறுதுணையாக இருந்தன என நான் கருதுகிறேன்..." என்ருர்.**

திராவிட முன்னேற்றக் கழகம் தற்போது ஆட்சியில் இல்லை என்றபோதும், தமிழகத்தில் இதுதான் பிரதானமான கட்சி கலைஞர் கருணுநிதியின் தலைமையிலான இக்கட்சிதான் இந்திஎதிர்ப்பில் முன்னணியில் நிற்கிறது — என்று மேற்கு ஜெர்மனியைச் சேர்ந்த இம்மாது தெளிவாகக் கூறும்போது இவருடைய சரியான மதிப்பீடு நமக்கு வியப்பையும், மகிழ்வையும் அளிக்கிறது.

" ஆரம்பத்தில் என் நாட்டவருக்கு தமிழகம் குறித்து அதிகம் தெரியாது. இப்போது நிலைமை மாறிவருகிறது. தமிழக மக்கள் — அவர்கள் நாகரிகம் குறித்து எனது நாட்டவர் இப்போது அறிந்து கொள்ள ஆர்வம் காட்டிவருகின்றனர். எடுத்துக் காட்டிற்கு, நான் பயின்ற பல்கலைக்கழகத்தில் இப்போது பல மாணவர்கள் தமிழ்மொழி — தமிழ் இலக்கியங்கள் குறித்து ஆர்வம் காட்டிப் பயின்று வருகிருர்கள்" என்கிருர் இவர்

இறுதியாக —

" என்னுடைய Ph. D. படிப்பை முடித்த பிறகு, தற்காலத் தமிழ் இலக்கியங்கள் சிலவற்றை நான் ஜெர்மன் மொழியில் மொழி பெயர்த்து, அவைகளை என் நாட்டு மக்களுக்கு அறிமுகப்படுத்துவேன்" — என்ருர்.

பேட்டியின் முடிவில் அழகான புன்னகை ஒன்றைச் சிந்திய இவர் இனிய தமிழில் 'வணக்கம்' என்ருர்.

இவர் தமிழ்நாட்டுக்கு வந்தவுடன் தமிழ்ப் பெண்மணிகளைப் போலவே உடை உடுத்தும் பழக்கத்தை மேற்கொண்டுள்ளார் என்பதும்குறிப்பிடத்தக்கது.

★

வேண்டாம் விளையாட்டு...

(4-ம் பக்கத் தொடர்ச்சி)

இந்தியை வைத்துஉலகாள நினைப்பவர்கள் ஒன்றை உணரவேண்டும்!

முடவன் கொம்புத் தேனுக்கு ஆசைப்படக் கூடாது, மலடி குழந்தைக்கு ஆசைப்படக் கூடாது.

இந்தியால் நினைத்துக் கூடப் பார்க்கவியலா அளவுக்குப் பெரிய சிறப்புகளைப் பெற்ற மொழிகளெல்லாம் இருக்கின்றன.

பெர்னுன்டஸ் கூறுகிருர் மக்களின் உணர்வைப் புரிந்து கொண்டதாக. மொரார்ஜி தேசாய் கூறுகிருர் நாட்டுப் பற்றுள்ளோர் இந்தி படித்தாக வேண்டும் என்று. ஏன் இந்த முரண்பாடு?

இன்றைய நாளில் இந்தியாவில் வாக்கெடுப்பு வைத்தால் மொரார்ஜி கூறுவது போன்ற நாட்டுப் பற்றுள்ளவர்கள் நான்கில் ஒரு பகுதியினர் கூட இருக்க மாட்டார்கள், என்ன செய்வதாக உத்தேசம்?

அனைத்து மொழிகளையும் அரியணை ஏற்றுக என்று மைய அரசை அணுகினுல் ஆள்வோர் கூறும் கூற்று என்ன தெரியுமா? இந்தி முதலில் ஐ நாவில் புக வேண்டும் என்பது. நாம் கேட்பது பட்டுக் கோட்டைக்கு வழி — அவர்கள் சொல்வது கொட்டைப் பாக்குக்கு விலை!

மைய அரசு நாட்டின் நிலையை ஒருகணம் சிந்திக்க வேண்டும்.

உண்பதற்கு ஒரு கவளம் உணவின்றி எச்சில் இலைக்காக நாயுடன் போராடும் மனிதர்கள் எத்தனை பேர்? வாழ்க்கை நடத்த வழியின்றி, வழுக்கி விழுந்து கடைச் சரக்காக, காட்சிப் பொருளாக, காசுக்குக் காணிக்கையாக தன் கற்பையே தந்து கதறித் துடிக்கும் கன்னியர் எத்தனை பேர்? குடியேற வீடின்றி கொட்டும் மழை. குமுறும் இடி, கொளுத்தும் வெயில் அனைத்தையும் தாங்கி தாங்கி தெருவோரம் வாழ்கின்ற ஏழை உள்ளங்கள் எத்தனை? எம். ஏ. படித்து ஏழாண்டு ஆகியும் வேலையின்றி வெதும்பும் இளைஞர் எத்தனை பேர்? கல்விப் பிச்சை எடுக்கக்கூடிய நேரத்தில் அன்னப் பிச்சை எடுக்கும் பிஞ்சு நெஞ்சங்கள் எத்தனை? பணத்தை மண்ணில் போட்டு விட்டு பருவமழை தவறியதால் விளைச்சல் காணுது, உருவம் தேய்ந்து ஓடாய் போன உழவர்கள் எத்தனை பேர்?

இவர்களையெல்லாம் நினைக்காமல் இந்தியெனும் படுகுழிக்கு பல இலட்சம் செலவு செய்ய முனைவது படுபாதகமன்ருே?

இறுதியாக ஒன்று, வெங்கொடுமைச் சாக்காட்டில் விளையாடும் தோளெங்கள் வெற்றித் தோள்கள். கங்கையைப்போல் காவிரிபோல் கருத்துக்கள் ஊறும் உள்ளம் எங்கள் உள்ளம், வெங்குருதி தனிற் கமழ்ந்து வீரஞ் செய்கின்ற தமிழ் எங்கள் மூச்சாம் எச்சரிக்கிருேம்.

எங்களிடம் வேண்டாம் இந்தி ஆதிக்க விளையாட்டு!

திரை மறைவில் துரோகிகள்!

துக்ளக் என்னும்கோமாளி ஏட்டில்தலையங்கம்என்றபெயரில் 15–2 79 இதழில் முழுக்க முழுக்க இந்தியை ஆதரிப்பதற்காக எழுதப்பட்டுள்ளது. ஏதோ தமிழினத்தை வாழ வைக்க வந்த உத்தமர் போல நஞ்சின் மீது இனிப்பைத் தடவி ஊட்ட முயற்சித்து பார்த்திருக்கிறுர் அதன் ஆசிரியர்.

"இந்திரா காந்தி நடத்திய காட்டு தர்பாரின் போது அவற்றை எதிர்த்து கண்டனம் தெரிவிக்காத அரசியல் வாதிகள்தான் இப்போது ஆர்ப்பாட்டமாகப் பேசுகிறுர்கள். தங்கள் அரசியல்பிழைப்பிற்கு கேடுவிளையும் என்றுபயந்ததால் இவர்கள் அனைவரும் ஹிந்தியை அல்ல, பேய்த்தனத்தைக்கூட எதிர்க்க மாட்டார்கள். இப்படிப் பட்டவர்களின் பேச்சுக்களை நம்பி தமிழக இளைஞர்கள் தங்கள்எதிர்காலத்தைப் பலவீனப்படுத்திக் கொள்வதில் என்ன புத்தி சாலித்தனம் இருக்க முடியும்?"

ஆகா! என்ன தாராளம்! தமிழிளைஞர்கள் மீது இப்படி ஒரு திடீர்ப்பற்று! தமிழிளைஞர்களின்புத்திசாலித் தனத்தைக் கேலிசெய்ய வேறு வழியைத் தேடியிருக்கலாம். 'காட்டு தர்பார்' நடத்தினுர் இந்திரா' என்று இவரே கூறிவிட்டு. அப்போதெல்லாம் ஏன் எதிர்க்கவில்லை என்றும் கேட்கிறுர். பாவம். ஆனுல் பேய்த்தனத்தைக்கூட எதிர்க்கமாட்டார்கள் என்று எழுதியிருப்பது அதனினும் வருந்தத்தக்கது. பேய்த்தனத்தையும், காட்டு தர்பாரையும் இந்தித் திணிப்பையும் அவ்வப்போது தி.மு.க. எதிர்த்தே வந்திருக்கிறது என்பதை இந்தத் துக்ளக் மறந்தாலும் தமிழினம் மறக்காது. நெருக்கடிநிலையை எதிர்த்து முதன் முதல் குரல் கொடுத்த இயக்கம் தி. மு. கழகம்தான் என்பதையும் அவருக்கு நினைவூட்டுகிறோம்.

'இந்தியைப் பொறுத்தமட்டில், அது திணிக்கப் படமாட்டாது என்ற உறுதிமொழியைப் பிரதமர் மிகத் தெளிவாகக் கூறியிருக்கிறுர்.''

நமது பிரதமரின் உறுதி மொழியை நம்புகிறவர்களில் இவரும் ஒருவர் போலும்! இக்கருத்தை வெளியிட்ட இவர் அந்த உறுதிமொழியையும் அதற்குக் கீழேயே வெளியிட்டிருந்தால் நல்லது. மேலும் இந்திராவின் உறுதிமொழியை நாம் நம்பியதாக எழுதியிருப்பது அதைவிட மோசம் எல்லாப் பிரதமர்களும் உறுதி மொழி கொடுக்கிறுர்கள். அவற்றை எல்லாம் தற்காலிகமாக ஏற்றுக்கொள்ள முடியுமே தவிர, அதுவே உண்மையென்று எப்போதும் நாம்

கோ. நெடுமாறன்

நம்பியதில்லை. சான்றுகச் சொல்ல வேண்டுமானுல் நேருவின் உறுதிமொழியை அரசியல் சட்டத்தில் இடம் பெறச் செய்யத் தொடர்ந்து வற்புறுத்தி வந்ததே போதும்.

"இந்தி பரவுவது தமிழ் மொழி அழிவதற்குஎப்படி காரணமாக இருக்க முடியும்? ஆங்கிலம் பரவியதால் தமிழ் அழிந்ததா?''
இது அடுத்த கேள்வி.

'தமிழையும் மத்திய ஆட்சி மொழியாக ஆக்குக' என்பதேநம்கழகத்தின்தற்போதைய கோரிக்கை அப்படித் தமிழ்மொழியும் ஆட்சிமொழியாக்கப்பட்டால் எங்களுக்கு இந்தி தேவையில்லாத ஒன்றல்லவா? நாம் கேட்கிறோம் தமிழ் இந்தியா முழுவதும் பரவினுல் இந்தி அழிந்தா போய்விடும்? தமிழனுல் மட்டும்தான் பலமொழிகளைக் கற்க முடியும் என்று எண்ணுகிறுர்களா? அப்படியானுல் இதற்குக் கீழே குறிப்பிட்டுள்ள

"சென்ற பத்து அல்லது பதினைந்து ஆண்டுகளாகத் தான் தமிழ்நாட்டில் கல்வியின் தரம் கீழே போய்க் கொண்டே இருக்கின்றது'' என்ற கருத்து முற்றிலும் தவறுனதே

எல்லாத் தமிழர்களுக்கும் தமிழ்நாட்டிலேயே வேலை வாய்ப்புகளை ஏற்படுத்தித்தர தி.மு.க.வோ. அ இ. அ. தி. மு க.வோ தயாரா?''

இது அடுத்த விஷமத் தனமான கேள்வி. இந்தி மட்டுமே தெரிந்த ஒருவனுக்கு இங்கிலாந்திலும், அமெரிக்காவிலும் வேலை வாங்கித்தர முடியுமா? இந்தி படித்துவிட்டால் இந்தியாவிலுள்ள எல்லோருக்கும் வேலை வாங்கித் தர யாராவது உத்தரவாதம் தருவார்களா? அப்படியானுல் வேலையில்லாத் திண்டாட்டம் தமிழ்நாட்டில் மட்டும்தான் இருக்கிறதா? அதுவும் இந்தி தெரியவில்லை யென்ற காரணத்தாலா? அல்லது இந்தி மொழியைப் படிப்பது தான் அவர்கள் நமக்குத்தரும் வேலையா? இந்தி படிப்பது என்றுல் அதை எந்த அளவு படிப்பது? இந்தி பேசத் தெரிந்தால் போதுமா? அல்லது இந்தியில் வைக்கப்படும் ஏழெட்டுத் தேர்வுகளில் வெற்றி பெற்று அதன் சான்றிதழ்களைக் காட்ட வேண்டுமா? அல்லது பட்டப்படிப்பு போன்ற தகுதியோடு இந்தியும் தெரிந்திருக்க வேண்டியது அவசியமா? பட்டப்படிப்போடு கூடிய தகுதிதான் தேவை யெனில் அண்ணுமலைப் பல்கலைக் கழகத்து மாணவர்கள் பலர் பி. காம் படித்து. அதில் இந்தி தேர்விலும் வெற்றி கண்டு இன்று வேலையில் இல்லாமல் இருக்கிறுர்களே அவர்கள் அனைவருக்கும் வட இந்தியாவில் வேலையிருக்கிறதா? இவர்கள் கற்றுள்ள இந்தி, இந்தியைத் தாய் மொழியாகக்கொண்ட வட நாட்டவர்களின் இந்தி அறிவோடு போட்டியிடத் தகுதி பெற்றது என நம்புகிறுர்களா?

வேலை வாய்ப்புக்கும், நிர்வாகத்திற்கும் மொழி எப்படி ஒரு கருவியாகத் திகழ முடியும்? இந்தி மொழியால் ஆற்றக் கூடிய பணியைத் தமிழோ ஆங்கிலமோ ஆற்ற முடியாதா?

இவையாவும் துக்ளக் அறியாததல்ல. ஆனுல் அறியாததுபோல் நடிக்கிறுர் துக்ளக் ஆசிரியர்.

'ஆங்கிலம் கற்றவர்கள் அனைவருமே தமிழுக்கு இழுக்குத் தேடியவர்கள் தானே? தமிழ்த் துரோகிகள் தானே? ஆங்கிலம் கற்றவர்கள் தமிழ்த் துரோகிகள் என்றுல்தான் ஹிந்தி கற்பவர்கள் தமிழ்த் துரோகிகள் ஆவார்கள்.'

இது அடுத்த சொத்தை வாதம்.

ஆங்கிலம் உலக மொழியாக ஏற்றுக் கொள்ளப்பட்டது அந்த மொழியைக் கற்றிருந்தால்தான் உலகின் பல்வேறு இடங்களில் நடைபெறும் நிகழ்ச்சிகள், கண்டு பிடிப்புகள் அந்நாடுகளின் முன்னேற்றத்திற்கான காரணங்களை நாம் அறிய முடியும் அதற்கு இந்தி மட்டும் போதுமா? ஆங்கிலம் என்ற ஒரு மொழி மட்டும் இல்லையெனின் இன்றைய தினம் இந்தியா இவ்வளவு பெரிய ஒரே நாடாக விளங்க முடியுமா? எப்போதோ அல்லவா சிதறிப் போய் இருக்கும்! எனவே ஆங்கிலம் கற்பது தமிழுக்கு விளைக்கும் துரோகம் அல்ல; அது தமிழுக்கு செய்யும் தொண்டு! மாருக இந்தி கற்பதுதான் தமிழுக்குச் செய்யும் துரோகம் தாய் மொழியிருக்க. உலகத் தொடர்புக்கு ஆங்கிலம் இருக்க. தமிழையும் மத்திய ஆட்சி மொழியாக்க வேண்டும் என்ற கொள்கைக்கு விரோதமாக இந்தியைத் தேசிய மொழியாகக் கொள்ள வேண்டுமென்பது உண்மையிலேயே தமிழுக்கு செய்யும் துரோகமே யாகும். கடைசியாக

"ஹிந்தி ஒழிக, தமிழ் வாழ்க' என்று கோஷங்களை எழுப்பி விடுவதால் மட்டும் தமிழ் வளர்ந்து விடாது, தமிழன் வாழ்ந்தால்தான் தமிழும் வாழும்!''

இதனை யாரும் மறக்கவில்லையே! ஆனுல் தமிழன் வாழ துக்ளக் காட்டும் அடிமைப் பாதைதான் வழியா? தமிழன் தலை நிமிர்ந்து வாழ இந்திதான் உதவுமா? தமிழ் மொழியாலேயே தமிழன் பெருத ஒரு வாழ்வை இந்தியால் பெற முடியுமா?

இந்தி தெரிந்தவர் ஐ. நா. சபையில் ஆங்கிலம் தெரிந்திருந்தும் தன் தாய் மொழியான இந்தியில் பேசுகிறுரெனில் அதற்குக் காரணம் என்ன? ஐ. நா. சபையில் எல்லோருக்கும் ஆங்கிலம் தெரியாது, இந்திதான் தெரியும் என்பதா?

தன்னை 'அதிமேதாவி' என்று கருதிக் கொண்டு, தமிழினத்துக்கே புத்தி சொல்லத் துணிந்துவிட்ட துக்ளக்குகளைக் கண்டு சிரிப்புத்தான் வருகிறது

தமிழினப் பகைவர்கள் எப்படி யெப்படியெல்லாம் நமது இலட்சியப் பாதையில் தடைக் கல்லாக நிற்பார்கள் என்பதற்கு இது ஓர் எடுத்துக் காட்டு!

தடைக் கற்கள் உண்டெடெனில்தடந்தோளும் உண்டு என்ற பாவேந்தரின் கவிதை வரிகளின் துணை கொண்டு தொடருவோம் நம் பயணத்தை!

சட்டமன்றத்தில் சூடும் சுவையும்!

'இது கொலைகார அரசு; ஆட்சியில்நீண்ட நாள் நீடிக்க முடியாது!'

— ஜேர்ஸ் (ஜனதா)

★

'ஒரு நாள் திடீரென்று சட்டமன்ற உறுப்பினர் விடுதிக்கு முதல்வர் வந்து சோதனை நடத்தினுல் எந்தெந்த அறையில் மதுப்புட்டிகள் நடமாடுகின்றன என்பதைத் தெரிந்து கொள்ளலாம்.'

— மேலவையில் சங்கரலிங்கம் (தி.மு.க)

★

'முதலாளி கொள்ளையடிப்பதை சுட்டிக் காட்டினுல் அமைச்சர் இராகவானந்தத்திற்கு வயிற்றுக் கடுப்பு வருவது ஏன்?'

(மார்க்ஸிஸ்ட் கட்சி உறுப்பினர்)
உமாநாத்

★

'எம். ஜி. ஆர். முதலமைச்சராக இருந்து கொண்டே சினிமாவில் நடிப்பது நல்லதல்ல. அது இரண்டு துறைகளிலும் அவருக்குக் கெட்ட பெயரை உண்டாக்கிவிடும். ஆகவே தனக்கு நம்பிக்கையானவரிடம் முதல்வர் பதவியை ஒப்படைத்துவிட்டு அவர் சினிமாவில் நடிக்கப் போகலாம்.'

— அப்துல் வஹாப் (முஸ்லிம் லீக்)

உறுதிக்கு!
உழைப்பிற்கும்!!

எங்கள் பிரதிநிதிகள்:
கே எம். ஜி. மாதவன்
சென்னை-4
பி. நெடுஞ்செழியன்
பி. ஏ.
பாண்டிச்சேரி.

— விசுவாசம்

தொலைபேசிஎண் கடை: 33213 இல்லம் 31922
நாம்நாடுவோர்தவறுமல் நாடுவது
தமிழக எண்ணெய்ப் பலகாரம்
தயாரிப்பு விற்பனை நிலையம்
92. திருப்பரங்குன்றம் சாலை மதுரை 11
தனிச்சிறப்பு: சிலேபி, தெக்கத்திமிட்டாய், அதிரசம், இனிப்புசேவு, பக்கவடா, மிக்சர், முருக்கு, கடலை நவதானியம் மற்றும் இனிப்புகாரவகைகள்

உரிமையாளர்
பே. தேவசகாயம்
கிளைகள்: 261. மேலமாசி வீதி, 70. சுவாமி சன்னதி
72. அழகர்கோவில் சாலை, 72.C, பெரியார் சாலை, மதுரை.

வீர வியட்நாமில் சீனவின் வாலாட்டம்!

பழனி சித்தார்த்தன்

வியட் நாம்...
வீரம் மிக்க வியட்நாம்—
அதனுடைய போராட்டம் முடிந்து விட்ட சிறுகதை அல்ல; இன்னும் இறுதி அத்தியாயம் காணுத நீண்ட தொடர் கதை!

ஆரம்பத்தில் ஜப்பானின் ஆக்கிரமிப்பை எதிர்த்துப் போராடியது. இரத்த வெள்ளத்தில் வெற்றிக் கொடி நாட்டியது! பிறகு பிரெஞ்சு ஆதிக்கத்தை எதிர்த்துப் போராடியது; ஆயிரமாயிரம் இன்னுயிர்களை ஈந்து வெற்றி கீதம் முழங்கியது!

தன் வீர வரலாற்றின் சிகரமென —

அமெரிக்க ஏகாதிபத்தியமே ஆக்கிரமிப்பில் இறங்கியபோது அதையும் புறமுதுகிட்டோடச் செய்தது!

மழைச் சாறல்களென குண்டுமாரிகள்—நாசகார நச்சு வாயு குண்டுகள் — ஏவுகணைகள் தாங்கி சீறிக் கிளம்பும் விமானங்கள் — பெருநாசம் விளைவிக்கும் பீரங்கிகள்... இராட்சத டாங்கிகள் —

உலகம் ஒப்புக் கொண்ட போர் விதிகளை யெல்லாம் மீறி— வியட்நாமை விழுங்கிவிட வேண்டும் என்ற வெறியோடு—களத்தில் இறங்கிய அமெரிக்க ஏகாதிபத்தியத்தையே மண்கவ்வச் செய்த வியட்நாம்வரலாற்றுப் பக்கங்களின் ஈரம் கூட இன்னும் காய்ந்திருக்காது — அதற்குள்-

கம்யூனிசத்தின் இழுக்காக சோசலிச நாடுகளிடையே ஒரு களங்கமாக இன்றுசெயல்பட்டு வரும் சீன தன் கோரப் பற்களைக்காட்டி வியட்நாமை கடித்துக் குதறத் துணிந்து விட்டது'

சீன —

செங்குருதியால் எழுதப்பட்ட அதனுடைய பெருமை மிகு சிவப்பு வரலாற்றுக் காவியம் — இன்று, திசை மாறிய போக்கு, போர்வெறி ஆக்கிரமிப்புப் பேராசைகள் போன்ற கரும்புள்ளிகளால் சீர்குலைந்து சிறப்பு மங்கி. 'சீச்சீ...இந்த நாட்டின் பவிசு இவ்வளவு தானு...' என்று அகில உலகத்தின் முன்பும் அருவருக்கப் பட்டு வருகிறது.

அமெரிக்க ஏகாதிபத்தியத்தோடு கொண்ட புதுக் காதலின் போதையால் —

சோசலிச சமுதாயம் பூத்துக் குலுங்கும் சோவியத்தையே வம்புக்கிழுத்து வரும் சீன —

அகில உலகஅரசியல் அரங்கில் விடுதலைக்காகப் போராடிய—போராடி வரும் நாடுகளுக்கு எதிராகவே கச்சை கட்டிக் கொண்டு வருகிறது.

அங்கோலாவின் மக்கள் அரசைக் கவிழ்த்தஎதிர்ப்புரட்சிக்காரர்களுக்கு இந்தச் சீன ஆயுத உதவி அளித்தது; பங்காள தேச விடுதலைப் போரின் போது முஜிபுர் ரஹ்மானின் விடுதலை இயக்கத்திற்கு ஒத்துழைப்புத் தரவில்லை இந்தச் சீன; சிலியில் மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்டு ஆட்சியை நடத்திய அலெண்டேயைப் படுகொலை செய்து விட்டு அட்சியைக் கைப்பற்றிய பினே செட்டின் அரசுக்கு அங்கீகாரம் அளித்ததும் இந்தச் சீனதான்!

இவைகளை யெல்லாம் விடக் கேவலமாக —

இனவெறி பிடித்த தென்னுப்பிரிக்க அரசை அனைத்து நாடுகளும் ஒட்டு மொத்தமாகப் புறக்கணித்திருக்கும் போது அதனேடு வியாபார ஒப்பந்தங்கள் மூலம் கூடிக் குலவுவதும் இதே சீனதான்!

'வியட்நாமுக்குப் பாடம் கற்பிக்கப்போகிறேன்...'' என்று சொல்லிக்கொண்டு இருபது மைல்களுக்கும் மேலாக அந்நாட்டில் ஊடுருவி நவீன போர்க் கருவிகளையெல்லாம் பிரயோகித்துவரும் சீனவின் போர் வெறி கண்டு- உண்மையான பொதுவுடமையாளர்களும், சோசலிஸ்ட்டுகளும் மனம் கொதித்துப் போயுள்ளனர்.

வியட்நாம் தன்னுடைய பேச்சைக் கேட்டு, தனக்கு மண்டியிடாது, சோவியத்தோடு நல்லுறவு கொண்டுள்ளதே சீனவுக்கு இன்றுள்ள கோபத்தின் உண்மையான காரணம்!

இதை மறக்க —

''கம்பூச்சியாவிலிருந்து வியட் நாம் துருப்புகள் வெளியேற வேண்டும்...'' என்று ஆசியாவின் பஞ்சாயத்துத் தலைவனகத் தன்னைப் பாவித்துக்கொண்டு பசப்புகிறது சீன.

கம்பூச்சியாவில் இனவெறி பிடித்து இலட்சக்கணக்கானேரைக் கொலை செய்த பால்பாட்டின் ஆட்சியை அப்புறப்படுத்திவிட்டு புதிய ஆட்சி ஏற்படுத்தியுள்ளனர் அந்நாட்டு மக்கள்.

அவர்களுக்கு வியட்நாம் ஒத்துழைப்புத் தருவது கண்டு சீனவுக்கு ஏன் கோபம் வர வேண்டும்?

குண்டுமாரிகளின் இரைச்சலும், பீரங்கிகளின் இடி முழக்கங்களும் மரணதேவதையைச் சுமந்து வரும் விமானங்களின் ஓசைகளும் வியத்நாம் தாயின் கருவிலிருக்கும் உருவடையாக் குழந்தைக்குக் கூடப் பழக்கப்பட்டுப் போனவைகள்;

அமெரிக்க ஆக்கிரமிப்பை எதிர்த்து நடத்திய போராட்டத்தின்போதே முகத்தில்புன்முறுவலோடுவீரமரணத்தைத் தழுவவியட்நாமின் இளந்தளிர்களிலிருந்து உதிரப்போகும் சருகுகள்வரை சித்தமாகிவிட்டன.

சீன என்னதான் கடுமையாகப் போரை முடுக்கிவிட்டாலும்,இறுதியில் வியட்நாம் மக்களின வீரமிக்க எதிர்த் தாக்குதல் முன் அதுபணியத்தான் போகிறது!

சீனவின் இந்த அத்துமீறலை 'ஆக்கிரமிப்பு' என்று சொல்ல வாஜ்பாய் ஆரம்பத்தில் தயங்கினுலும், இன்று 'சீன செய்வது தவறு' என்று வெளிப்படையாகக்கண்டித்துள்ளார். அத்தோடு தம்முடைய சீனப் பயணத்தைப் பாதியிலேயே முடித்துக் கொண்டு இந்தியா திரும்பிவிட்டார்.

ஒரு பக்கம் சமாதனம் குறித்து வாய்கிழியப் பேசிக் கொண்டே மறுபக்கம் ஆக்கிரமிப்பில் ஈடுபடும் சீனவை எப்படி நம்புவது?

1962 – ஆம் ஆண்டிலேயே 'பஞ்சசீலக்' கொள்கைகளை ஆழக்குழிதோண்டிப்புதைத்து விட்டு, நம்பிக்கை என்ற முதுகில் துரோகம் என்ற கத்தியால் நம்மைக் குத்தியதும் இதே சீனதான் —

எனவேதான் —

சீனவோடு பேச்சுக்கள் நடத்தும்போது எச்சரிக்கையாக இருக்க வேண்டும் என்று வாஜ்பாயைப் பலரும் அறிவுறுத்தினர்கள்.

வியட்நாம் மீது சீன செய்திருக்கும் ஆக்கிரமிப்பைக் கண்டித்து. சீன உடனே வெளியேற வேண்டும் என்று மார்க்ஸிஸ்டுகளும் குரல் எழுப்பியுள்ளனர்!

வியட்நாமிற்குப் பாடம் கற்பிக்கப் போவதாக சீன கொக்கரிக்கிறது.

ஆனல் —

அது பாடம் கற்பிக்கப் போகிறதா அல்லது பாடம் கற்றுக்கொள்ளப் போகிறதா என்பதைப் பொறுத்திருந்து பார்ப்போம்.

வியட்நாமை விட்டு சீன வெளியேற வேண்டும் என்ற இந்திய மக்களின் குரலை தி.மு கழக உறுப்பினர் ஜி.லட்சுமணன் நாடாளுமன்றத்தில் எதிரொலித்து உள்ளார்! அன்றும் — இன்றும் — என்றும் போர்களுக்கும், ஆக்கிரமிப்புகளுக்கும் எதிராகத் தொடர்ந்து தி மு கழகம் குரல் கொடுக்கும்!

பரபரப்புடன் விற்பனை ஆகிறது!

கண்ணியம்

இந்த வாரம் படித்தீர்களா?

ஆசிரியர் ஆ.கோ.குலோத்துங்கன்

சிறப்பாசிரியர்: வெற்றிகொண்டான்

கழகத்துக்கோர் அணிகலன் கலைஞர்க்கோர் படைக்கலன்!

ஆசிரியர்: 'கண்ணியம்' 2, II சர்க்கிள் ரோடு, ஜவகர் நகர், சென்னை — 82

நந்தனர் நிலை நீடிக்கலாமா?

[12-ம் பக்கத் தொடர்ச்சி]

கொண்டையா சௌதிரி தெரிவித்து இருக்கிருர்.

இந்நிலையில் மடாதிபதி மீதோ அர்ச்சகர்கள் மீதோ நடவடிக்கை எடுக்கப்படுமா? என்ற கேள்விஎல்லோருடைய உள்ளத்திலும் எழத்தான் செய்கிறது.

ஆந்திர மாநிலத்தில் இப்படிப்பட்ட அக்கிரம சம்பவம் நடைபெற்றுள்ளதே என்பது தான் நமக்கு ஏற்பட்டுள்ள வேதனை.

இந்தப் பிரச்சினைக்கெல்லாம் பரிகாரம்.சட்டம் இயற்றினுல் மட்டும் போதாது. பகுத்தறிவுப் பிரச்சாரமும் பலமாக செய்தாக வேண்டும்.

சனுதனங்களும், சம்பிரதாயங்களும், பழமையின் இறுக்கமும் மூட நம்பிக்கைகளின் மொத்தமும் நாம் அவ்வப்போது எட்டும் சில சனநாயக வெற்றிகளுக்குச் சாவு மணி அடிக்கின்ற சத்தத்தை உணர்ச்சி உள்ளவர்களின் செவிகள் மட்டுமே உணருகின்றன.

இன்னும் இங்கே நந்தனர்களை அனுமதிக்காத நத்தை மனம் உள்ளவர்களின் கொட்டம் அடங்கவில்லை,

சட்ட சபைகளின் கதவுகளைத் திறந்து விடும் அரசியல் அமைப்பு கோயிலின் கதவுகளுக்கு மட்டும் இன்னும் எஃகுத் தாழ்ப்பாள் இட்டு வைத்திருப்பதை அனுமதிப்பது ஏ ?

ஜனநாயகப் பண்புள்ள ஒவ்வொரு குடிமகனும் வெட்கப்பட வேண்டிய சேதிதான் எர்ரணுவுக்கு இழைக்கப்பட்ட அநீதி.

இத்தகைய அநீதிகள் இன்னும் தொடராமலிருக்க—நந்தனர் நிலை நீடிக்காமல் இருக்க தந்தை பெரியாரின் சிந்தனைகளையும் டாக்டர் கலைஞரின் செயல் முறைகளையும் மத்திய அரசும், மாநில அரசுகளும் பிறழாமல் பின்பற்ற வேண்டும் என்ற படிப்பினையைத் தான் ஆந்திர நிகழ்ச்சி அளித்திருக்கிறது.

★

அரசுக்கு இழப்பு: அமைப்பாளருக்கு வரவு!

'மதுவிலக்கை அமுல்படுத்'துவதில் ஓரளவு காந்தியடிகளின் வழிவந்தவர்களைப்போலப் பேசுகிறீர்கள். ஆளுங்கட்சியில் குடிக்காதவர்களின் சதவீதம் என்ன என்று பார்க்க நீங்கள் தயாரா? அதிகமாகக் குடித்துவிட்டு கள்ளச் சாராயத்தையும் காய்ச்சி விற்க வழிவகுத்துவிட்டு மதுவிலக்கைப்பற்றிப் பிரமாதமாகப் பேசுகிறீர்கள்

பட்டி தொட்டிகளிலெல்லாம் ஆளுங்கட்சியினர் தலைமையில் கள்ளச் சாராயம் ஆருக ஓடிக் கொண்டிருக்கிறது. மதுவிலக்கால் ஆண்டு ஒன்றுக்கு ரூ. 120 கோடி இழப்பு ஏற்படுகிறது. மத்திய அரசு மான்யம் வழங்க வேண்டும் என்று நமது நிதியமைச்சர் கூறுகிருர். ஆனல் அதே நேரத்தில் ஆண்டு ஒன்றுக்கு கள்ளச் சாராயத்தின்மூலம் ரூ 50 கோடி ஆளுங் கட்சிக்காரர்களுக்கு ஆதாயமாகக் கிடைக்க வழிவகை செய்திருக்கிறீர்கள். இதற்கு ஆதாரம் கேட்டால் நான் தரத் தயார்!

—சட்டமன்றமேலவையில்
ஆற்காடு வீராசாமி

நந்தனார் நிலை நீடிக்கலாமா?

நம் நாடு
ஆசிரியர்: மு. கருணாநிதி

'சாதிகள் இல்லையடி பாப்பா'' என்று குழந்தைகளைப் பார்த்து இளமையிலே சொன்னால் ஏற்பார்கள் என்ற எண்ணத்தில் தானோ என்னவோ தேசியக் கவிஞர் பாரதியார் கூட பாடிப்பார்த்தார்.

நாட்டு விடுதலைக்குப் பாடுபட்ட அண்ணல் காந்தியடிகளும் கூறினார், ''சாதிகள் ஒழிய வேண்டும். சமத்துவம் மலர வேண்டும்'' என்று.

அறுபதாண்டுக்காலம் அயராது பாடுபட்ட ''வைக்கம் வீரர்' பெரியார். சாதிக் கொடுமைகளைச் சாடினார். ஏற்றத் தாழ்வற்ற சமுதாயம் ஏற்படுத்தப் போராடினார்.

பேரறிஞர் அண்ணா அவர்களும் சாதி பேத மற்ற சமுதாயம் காண பேசிய மேடைகள் ஏராளம். எழுதிய ஏடுகள் எண்ணற்றவை. கூட்டிய மாநாடுகளுக்கோ குறைவில்லை

இந்த இரு பெரும் இனத் தலைவர்களுக்குப் பின்னாலே தமிழினத் தலைவர் டாக்டர் கலைஞர், பிறப்பால் பேதம் கற்பிக்கப்பட்டு இழிவு படுத்தப்படுகின்ற கொடுமை இனியும் நாட்டில் இருத்தல் ஆகாது என்பதற்காக சொல்லால் மட்டுமல்ல செயலாலும் நிறைவேற்றிக் காட்டினார்.

கலைஞர் ஆட்சிப் பொறுப்பில் இருந்த போது தாழ்த்தப்பட்ட மக்கள் கல்விப்பணியிலும் வேலைக்கு அமர்த்தப்படுவதிலும் அதிக அக்கறை காட்டினார். குடியிருப்பு அளிப்பதிலும் தனிக்கவனம் செலுத்தினார்.

தாழ்த்தப்பட்ட மக்கள் மற்ற மக்களோடு சமநிலை பெற்றிட அர்ச்சகர் பொறுப்பிலும் அமர்த்தப்பட அரசு மூலம் ஆணை பிறப்பித்தார்.

ஆனால் சமுதாயத்தில் ஆதிக்கம் பெற்றுள்ளவர்களால் உச்ச நீதி மன்றத்தில் அச் சட்டம் ஊமையாக்கப் பட்டுவிட்டது.

சமுதாயத்தில் அழுத்தப்பட்டு அடிமைகளாக நடத்தப்பட்டு வரும் தாழ்த்தப்பட்ட மக்களை உயர்சாதி மக்களோடு உலவச் செய்திட வேண்டும் என்கிற இலட்சிய வேட்கை கொண்டார் கலைஞர்

தாழ்த்தப்பட்ட சாதிப் பெண்ணை தனது மகனுக்குத் துணையாக்கி சமுதாயத்தில் ஒரு புரட்சியையும் செய்து காட்டினார்.

சாதிக் கொடுமைகளை எதிர்த்து மூடப் பழக்க வழக்கங்களை எதிர்த்து திராவிடர் இயக்கங்கள் நடத்தி வரும் பிரச்சாரங்களுக்கும், போராட்டங்களுக்கும் பிறகு தமிழகம் சாதி ஒழிப்பில் ஓரளவு வெற்றியைக் கண்டிருக்கிறது.

இந்நிலை அண்டை மாநிலமான ஆந்திராவில் இல்லையே. அங்கு நடந்துள்ள ஒரு சம்பவம் நமது இதயத்தில் அல்லவா ஈட்டியைப் பாய்ச்சுகிறது.

அந்தச் சம்பவம் பற்றி ஆந்திர மாநில சட்டப் பேரவையை நேற்று சலசலக்க வைத்திருக்கிறது.

ஆந்திர மாநிலத்தில் உள்ள கர்நூல் மாவட்டத்தில் மந்தராலயத்தில் உள்ளதுதான் ஸ்ரீ ராகவேந்திரசாமி கோயில்.

1979 ஆம் ஆண்டு நவம்பர் திங்கள் 24 ஆம் நாள்—ஆந்

★★★★★★★★★★★

சா. க.

★★★★★★★★★★★

திர மாநில உள்ளாட்சித்துறை அமைச்சர் மாண்புமிகு எம். பாகா ரெட்டியும் சட்டப் பேரவை உறுப்பினர் சிலரும் ராகவேந்திர சாமி கோயிலுக்குச் சென்றனர் — இறைவனை வணங்குவதற்காக.

இவர்களெல்லாம் சாமியைக் கும்பிட்டுக்கொண்டிருக்கும் போது அவர்களில் ஒரு எம். எல். ஏ யான சத்திய நாராயணா என்பவர் எம். எல். ஏ. யான எர்ரண்ணாவைப் பார்த்து, ''தங்களை வெளியே உள்ள ஒருவர் அழைக்கிறார் என்று கன்னட மொழியில் கூறுகிறார்.

கோயிலுக்கு வெளியே வருகிறார் எர்ரண்ணா. அங்கு நின்றிருந்த எம். எல். ஏ யான ராகவ ரெட்டியாரோடுபேசிக் கொண்டிருக்கிறார்.

அப்போது எர்ரண்ணாவின் கண்ணெதிரிலேயே கதவுகள் மூடிச் சாத்தப்படுகின்றன.

ஏன் கதவுகள் பூட்டப்பட்டன தெரியுமா? அந்த இரக்கத்திற்குரிய எர்ரண்ணா அரிசன வகுப்பைச் சார்ந்தவராம்

எனவே கோயிலில் அனுமதிக்கக் கூடாது என்பதற்காகவே கோயில் நிர்வாகிகள் கோயிலின் கதவுகளை மூடித் தாழ் போட்டனராம்.

இந்த அவமதிக்கும் காரியத்தை தெரிந்து கொண்ட எர்ரண்ணா கொதிப்படைந்தார் தனக்குஇழைக்கப்பட்ட அநீதியை எண்ணி வேதனைத் தீயில் விழுந்தார்.

உடனே எர்ரண்ணா அமைச்சரை அணுகினார். மீண்டும் தன்னை கோயிலில் அனுமதிக்கக் கேட்டுக் கொண்டார்.

அமைச்சர் பாகா ரெட்டி நிர்வாகிகளுக்கு ஆணைப்பிறப்பித்தார். எர்ரண்ணாவை கோயிலுக்குள் அனுமதிக்கும்படி,

கோயிலில் இருந்த அர்ச்சகர்களோ அந்த அரிசன எம். எல். ஏ யை கடைசிவரை கோயிலின் உள்ளேஅனுமதிக்க மறுத்து விட்டனர்.

அதே அரிசன எம். எல். ஏ. எர்ரண்ணா சென்ற ஆண்டு ஜூன் திங்களில் முதல்அமைச்சரோடு அந்த கோயிலுக்குச் சென்றபோது அனுமதிக்கப் பட்டிருக்கிறார் அப்போது எவருக்கும் அவர் அரிசன வகுப்பைச் சார்ந்தவர் என்பது தெரியாது.

அவர் கோயிலுக்கு வந்து போன பிறகு கோயிலைச் சார்ந்த எல்லோரும் அவர் அரிசன வகுப்பைச் சார்ந்தவர் என்று தெரிந்து கொண்டனராம்.

அதனால்தான் இரண்டாம் முறை அதாவது நவம்பர் திங்களில் வந்தபோது தடுக்கப்பட்டிருக்கிறார்.

எர்ரண்ணா இச்சம்பவத்தை மாவட்ட ஆட்சித் தலைவரிடமும், மாவட்ட போலீஸ் உயர் அதிகாரியிடமும் புகார் கூறி நியாயம் கேட்டார்.

முதல் அமைச்சரிடமும் மற்ற அமைச்சர்களிடமும் புகார் கொடுத்துங்கூட எந்த விதமான நடவடிக்கையும் இதுவரை எடுத்தபாடில்லை.

ஆந்திர மாநிலச் சட்டப் பேரவையில் வரவு செலவு திட்ட விவாதத்தின்போது எர்ரண்ணா தனக்கு ஏற்பட்ட அவமதிப்பை வேதனையோடு எடுத்து வெளியிட்டிருக்கிறார்.

'அரசு அந்தக் கோயிலை எடுத்துக் கொள்ளவேண்டும். தாழ்த்தப்பட்ட மக்களை கோயிலில் அனுமதிக்கவேண்டும். அந்தக் கோயிலின் நிர்வாகியாக தாழ்த்தப்பட்ட இனத்தவரை நியமிக்கவேண்டும்.''

இதுவே அரசுக்கு அவர் விடுத்த பணிவான வேண்டுகோள்.

இவ்வளவு முறையிட்டிற்குப் பிறகும் ஏதேனும் நடவடிக்கை எடுக்கப்பட்டதா என்றால் இல்லை.

புகாருக்குப் பின்னர் முதல் அமைச்சர் பூசி மெழுகியிருக்கிறார்;

''தீண்டாமை என்பது கொடுமையான ஒரு குற்றம். அதை மீறுவோரைபிடியாணையின்றியே கைது செய்யலாம்.'

''அரசு குற்றமிழைத்தோர் மீது உடனடியாக நடவடிக்கை எடுத்திருக்கலாம்'' என்று பேரவையின் தலைவர் திவி

(தொடர்ச்சி 11ம் பக்கம்)

தடுமாறுகிறது ஆளுங்கட்சி-தட்டிக் கேட்கிறது எதிர்க்கட்சி!

'குற்றங்கள் நடைபெறுகின்றன என்கிறபோது ஆளுங் கட்சியினர் பொறுப்பு அந்தக் குற்றங்கள் நடைபெறாமல் தடுப்பது தானே தவிர ஏற்கெனவே நடைபெறவில்லையா? என்று கேட்பது பயனுள்ள வாதமாக இருக்காது!

வீட்டிலே திருட்டுப் போய் விட்டது. திருடர்கள் நுழைந்து விட்டார்கள். நீங்கள் தடுக்க வேண்டும் என்று காவல் நிலையத்தில் தெரிவிக்கிறபோது,

காவல் துறையிலே உள்ளவர்கள்—'உங்கள் வீட்டில் மட்டும் தானா திருட்டுப் போகிறது? ஊரெல்லாம் திருட்டுப் போகிறது. இப்போது மட்டுமா போகிறது? பல ஆண்டுகளாகப் போகிறது. ஆகவே. நீங்கள் இப்போது புகார் செய்தால் என்ன பலன்?' என்று கேட்டால் அது நல்லதில்லை.

அப்படித்தான் ஆளுங் கட்சியினரால் ஏற்படும் அக்கிரமங்களை எடுத்துச் சொல்கிறபோது – அந்த அக்கிரமங்களையெல்லாம் ஏதோ முதலமைச்சரே நேரடியாகச் செய்வது போல நாங்கள் சொல்லுவதாக எண்ணிக்கொண்டு. அவரைப் பாதுகாப்பதாக எண்ணிக்கொண்டு நிர்வாகத்திலே இருக்கிற குறைகளைக் கண்காணிக்க வேண்டுமே என்று கூட இல்லாமல் இந்தக் குறைகளை முன்னாள் முதலமைச்சர் செய்யவில்லையா? அப்போது இப்படியெல்லாம் நடைபெறவில்லையா? என்று கேட்பது சரியல்ல.

எதிர்க்கட்சிகளெல்லாம் ஒரே குரலில் ஒரே விதமாகப் பேசத் தலைப்பட்டிருக்கின்றன. அறிஞர் அண்ணா காலத்திலேயே எதிர்க்கட்சியினர்எல்லாம் அப்படித்தான் பேசினார்கள் என்று சொல்வது தங்களிடம் ஏற்பட்டிருக்கிற குழப்பமான சூழ்நிலைக்குச் சொல்லப்படுகிற தவறான வாதமே தவிர தெளிவாக உறுதியாக நடந்துகொண்டிருப்பார்களானால் அப்படிப்பட்ட வாதங்கள் பிறக்காது.

—ஆளுநர் உரைமீதான விவாதத்தில் எதிர்க்கட்சித் துணைத் தலைவர் பேராசிரியர்.

திராவிட முன்னேற்றக் கழகத்திற்காக ஆசிரியர் மு கருணாநிதி அவர்களால், அழகிரி அச்சகத்தில் (156 சூரியநாராயண செட்டித்தெரு, இராயபுரம்-600013) அச்சிட்டு வெளியிடப்பட்டது நிர்வாக அலுவலகம் 'அன்பகம்' 508 அண்ணாசாலை, தேனாம்பேட்டை சென்னை—600018 தொலைபேசி: 441009